
# தென்றல்

ஆசிரியர்... கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, வைகாசி 30 (13-6-'59). சனிக்கிழமை | இதழ் 52

## மதுரை ஆலையில்...

~நமது நிருபர் தகவல்~

கண்ணகி காலத்தில் மதுரை நகரம் பற்றி எரிந்ததென்பர். மெய்யோ பொய்யோ, இன்று 25000 தொழிலாளர்கள் வயிறெரியும் கொடுமை மதுரையில் நடக்கிறது. மதுரையிலும் விக்ரமசிங்கபுரத்திலும் தூத்துக்குடியிலுமாக, A. & F. ஆர்வியின் நிர்வாகத்தில் உள்ள ஆலைகளில் வேலை பார்க்கும் 25000 தொழிலாளர்களும் அந்த ஆலைகளில் நடக்கும் கதவடைப்பால் திண்டாடுகின்றனர்.

வெள்ளையன் வெளியேறிவிட்டான் என்று தொண்டை கிழியக் கத்துகின்றனர். ஆனால், ஆர்வி போன்ற பல வெள்ளைக் கம்பெனிகளால் கோடிக்கணக்கான பணம் இன்றும் வெள்ளையர் நாட்டிற்குச் செல்கிறது. இந்தக் கொடுமைக்காரர்களைக் கண்டிப்பது காங்கிரசாரால் இயலாத ஒன்றாய் இருக்கிறது. அவ்வப்போது அரசியல் கட்சினர் என்ற பெயரால் இவர்களிடம் பெறும் சில பல காசுகளுக்காக, காங்கிரசார் வாய்மூடிக் கிடக்கின்றனர் அன்றேல் ஆளும் கட்சியினரான காங்கிரசார் மதுரை ஆலையில் நடக்கும் கதவடைப்பை எப்போதோ நொறுக்கியிருக்க முடியும். இதனைச் சிறிது காண்போம்.

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட் எனற பெயரைக் கொண்ட மதுரை ஆலை தென் ஆசியாக்கண்டத்திலேயே மிகப் பெரிய ஆலை. உலகத்திலேயே இரண்டாவது பெரிய ஆலை. சுமார் 5 லட்சம் நூல் நூற்கும் கதிர்களைக் கொண்டது. மதுரை, விக்ரமசிங்கபுரம், தூத்துக்குடி முதலிய இடங்களில் இந்த ஆலை நிறுவப்பட்டிருக்கிறது. சுமார் 25,000 தொழிலாளர்கள் வேலைசெய்கிறார்கள். இன்று இருக்கும் வெள்ளைக்கார நிர்வாகிகள் ஆலையைக் கதவடைப்பு செய்திருக்கிறார்கள். அதனால் 25,000 குடும்பங்களும் அவர்களைச் சார்ந்துள்ள வியாபாரிகளும் பசியால் துடிதுடிக்கின்றனர். பார்த்துச் சிரிக்கிறான் அந்த கொள்ளைக்காரன். பக்கத்திலிருந்து தட்டிக்கொடுக்கிறார்கள் அரசிலுள்ள 'கதர் ஜிப்பாக்கள்'. ஏன் இந்த நிலை?– யார்மேல் தவறு? தொழிலாளர்கள் தவறாக நடந்தார்களா? நிர்வாகிகள் தவறாக நடந்தார்களா? இதைச் சிறிது ஆராய்வோம்.

### நிர்வாகத்தார் அறிக்கை

சென்ற 18 5-59-ல் மதுரை மில் நிர்வாகிகள் தமிழ்நாட்டிலுள்ள சகல பத்திரிகைகளிலும் தொழிலாளிகளைப் பயமுறுத்தி விளம்பர அறிக்கை கொடுத்திருந்தார்கள். அதைக் கண்டு பலர், கோவை வேலைப் பளுவைத் தானே பார்க்கச் சொல்லுகிறான், அதை இவர்கள் பார்த்தாலென்ன என்ற கேள்வியைக் கேட்டார்கள். அது பொதுமக்களுக்குக் குழப்பத்தை விளைவித்தது. ஏனென்றால் அந்த விளம்பரம் வேண்டுமென்றே தொழிலாளருடைய ஒற்றுமையைப் பலவீனப்படுத்துவதற்கும், தொழிலாளர்பால் பொதுமக்கள் காட்டும் இரக்க உணர்ச்சியை அழிப்பதற்கும் கொடுக்கப்பட்ட விளம்பரமாகும்.

### வேலைப்பளுவும் பழைய கருவிகளும்

இதுவரை தொழிலாளர் பார்த்து வந்த வேலைப்பளு கோவை வேலைப் பளுவிற்குச் சமமானதாகும். அது மட்டுமல்ல. மதுரை வேலைப்பளு கோவை வேலைப்பளுவிற்கு சமமானதென்று கோர்ட்டே தீர்ப்பு சொல்லியுள்ளது. கோர்ட்டார் கோவை மில்களுக்குச் சென்றும், மதுரை, சிங்கை, தூத்துக்குடி ஆலைகளுக்கும் சென்று பார்வையிட்டும் முதலாளிகளினுடைய வாதங்களையும் கேட்டு. சாட்சிகளை விசாரித்துத் தீர்ப்பளித்தார். மதுரை மில், இயந்திரங்கள் மிக மிகப் பழைமையானவை. இரு மாடிகள் கொண்டவை. பகுதிக்குப் பகுதி (டிபார்ட்மெண்ட்டிற்கு டிபார்ட்மெண்ட்) அதிக தூரமுள்ளவை. இந்த அடிப்படையிலேயே கோவை வேலைப்பளுவை மதுரை மில்லில் புகுத்தினர். அது தவிர, தொழில் நிபுணர்களின் கருத்துப்படிச் சில இடங்களில், பிரத்தியோக வேலைகளுக்கு முதலாளி – தொழிலாளி சேர்ந்த இருதரப்பு கமிட்டியில் விவாதித்து சில இடங்களுக்கு தனியாக ஆட்கள் தந்தார்கள். இரண்டு, மூன்று விஷயங்களில் இருதரப்புக் குழுவும் உடன்படாததால் சர்க்கார் நிபுணர் முடிவிற்குவிட்டு, அவர் தந்த முடிவை ஏற்று வேலை செய்து வந்தனர். இந்த முதலாளி, தொழிலாளி, நிர்வாகத்தொழில் நிபுணர்கள், சர்க்கார் தொழில் நிபுணர்கள் முதலியோர் கண்ட முடிவுப்படி ஏற்படுத்திய கோவை வேலைப் பளுவை ஏற்று தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். ஆனால் திடீரென்று முதலாளிகள் தாங்கள் கொள்ளையடித்த பணம் போதாதென்று கருதியதாலோ - அல்லது தொழிலாளர் இரத்தத்தை உறிஞ்சியது காணாது என்ற இரத்த வெறியாலோ – பல பகுதிகளில் அதிக வேலை பளுவை புகுத்தினர். தொழிலாளர்கள் என்ன மாடா? அணுசக்திக்கு அப்பாற்பட்ட–தன் சக்திக்கு மீறிய காரியங்களைச் செய்ய அவர்களென்ன மிருகங்களா? முதலாளிகள் நுழைக்கும் அத்தகு வேலையைச் செய்தால், தொழிலாளிகள் அனைவரும் ஒரு வாரத்தில் மருத்துவ மனைக்கோ அல்லது மயானத்திற்கோ போய்த்தானாக வேண்டும்.

### நஷ்டமில்லை!

வேலைப்பளுவை நுழைப்பதற்கு முதலாளிகள் காட்டும் முக்கியமான காரணம் சென்ற ஆண்டில் ஏற்பட்ட நஷ்டம்தான். ஆனால் உண்மையாகவே சென்ற ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டதா என்று பார்த்தால் சென்ற ஆண்டில் நஷ்டம் ஏற்படவேயில்லை. பங்குதாரகளை ஏமாற்றுவதற்கும், தொழிலாளர்களுக்கு போனஸ் தராமல் மாற்றுவதற்கும் காட்டப்பட்ட நஷ்டமே தவிர உண்மையில் அவர்களுக்கு நஷ்டமே ஏற்படவில்லை.

சென்றஆண்டு சுமார் 50,00000 ரூபாய் நஷ்டமெனக் காட்டப்பட்டது. அதிலே 25,00000 ரூபாய் 1957-ம் ஆண்டில் தொழில் கோர்ட் தீர்ப்பின்படி கொடுக்கவேண்டிய போனஸ் ஆகும். இது சுப்ரீம் கோர்ட் அப்பீலில் இருப்பதால் அந்தப் பணம் இன்னும் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அதனுடைய வட்டி முழுவதும் மதுரை மில்லுக்கு ஆதாயம். கோவை மில்லின் வேலை பளுவிற்கு சமமாக மதுரை மில் வேலைப்பளுவை அதிகரிக்கும்பொழுது சுமார் 3,000 தொழிலாளிகள் கிராட்டியுட்டி கொடுத்துவெளியேற்றப்பட்டார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட கிராட்டியுட்டியே சுமார் 25,00000 ஆகிறது. முறையாகக் கணக்கு வைக்கப்பட வேண்டுமென்றால் இந்த கிராட்டியுட்டி கொடுக்கப்பட்ட 25,00000 மும், சுமார் 10 ஆண்டுகளுக்காகப் பிரித்து ஆண்டுக்கு சுமார் இரண்டரை இலட்சம் ரூபாயாக எழுதப்பட வேண்டும். அப்படி எழுதப்படாமல், தொழிலாளிகளையும் பங்குதார்களையும் ஏமாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கோடு, ஒரே ஆண்டில் செலவு கணக்கில், 25,00000-மும் எழுதப்பட்டது.

### வெள்ளையர் கொள்ளை—கமிஷன் என்ற பெயரில்!

இனி எப்படி வெள்ளையர்கள் கொள்ளையடிக்கிறார்கள் என்பதைப் பார்ப்போம். மதுரை மில்ஸுக்காக ஏஜண்டுகளாக இருந்து பஞ்சு வாங்குவதற்காக காமரீன் இன்வெஸ்மெண்ட் டிரேடிங் கம்பெனி பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அதனுடைய மூலதனம் முழுவதும் மதுரை மில்லின் பங்குகளை வாங்குவதற்காகப் பயன் பட்டதே தவிர, பஞ்சு வாங்குவதற்கு பயன்படவில்லை. ஆனால் மதுரை மில் அந்தக் கம்பெனிக்கு ஆண்டுக்குப் பலகோடி ரூபாய்களை அட்வான்சாகத் தந்து பஞ்சு வாங்கித் தரும்படி கேட்டுக் கொள்கிறது. அந்தக் கம்பெனியும் மதுரை மில் பணத்திலேயே பஞ்சு வாங்கிக் கொடுத்துவிட்டு கமிஷனாக சுமார் 10 இலட்சம் ரூபாய்களை விழுங்கிக்கொண்டிருக்கிறது. அதில் என்ன சுவாரசியமென்றால காமரீன் கம்பெனி ஆபீசர்களுக்கு மதுரை மில்லே சம்பளம் தருகிறது. இடைத்தரகனாக இருந்து பஞ்சு வாங்கும் காமரீன் கம்பெனியிலும், கைக்கூலி வாங்கிக்கொண்டு மிகவும் மோசமான பஞ்சை வாங்கி மில்லுக்குத் தந்ததால், மதுரை மில்லின் நூலின் தரம் குறைந்தது அதனால் விலை குறைந்து மதுரை மில்லுக்கு நஷ்டம் ஏற்பட்டது. மதுரை மில டைரக்டர்களே, காமரீன் கம்பெனி டைரக்டர்களாக இருப்பதால், இத்தகைய சீர்கேடுகளை மூடி மறைக்க முடிகிறது. மதுரை மில்லே நேரடியாக பஞ்சு வாங்கினால் ஆண்டிற்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் லாபம் மட்டுமல்ல, தரங்குறையாத பஞ்சும் வாங்க முடியும்.

— 5-ம் பக்கம் —




திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு ஏறத்தாழப் பத்து ஆண்டுகள் கழிந்துவிட்டன. இந்தப் பத்து ஆண்டுகளில் அரசியல், சமுதாயப் பொருளாதாரத் துறைகளில் நமது கழகம் ஆற்றியுள்ள பணி சரித்திரத்துப் பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டியவை. குறிப்பாகச் சீரழிந்துகிடந்த சமுதாயத்தைச் செம்மைப்படுத்தி அரசியல் விழிப்புணர்ச்சிக்கு வழிவகுத்தது நமது கழகம்தான். சாதிச் சச்சரவுகளாலும் சமுதாயத்திற்கே உரித்தான பொருமை—பொச்சரிப்புக்களாலும் தாக்கப்பட்டு தமிழ்மக்கள் விழிஇருந்தும் வழி தெரியாக் குருடர்களாக வாழ்ந்த காலத்து, செம்மைப்படுத்தப்பட்ட சீர்திருத்தப் பாதை வழி வாரீர் எனக் குரல் கொடுத்தது தி. மு. கழகம். மாநாடு நடத்தும்பொழுதெல்லாம் சமுதாயச் சீர்திருத்த மாநாடு முதல் நாளும் அரசியல் மாநாடு அதற்கு மறுநாளும் தமிழகமெங்கும் நடத்திக் காண்பித்தோம் நாம். எனவே சமுதாயச் சீர்திருத்த மாநாட்டை முதலில் நடத்திய பெருமையும் தி. மு. கழகத்திற்கே வருகிறது. அகில இந்தியக் கட்சிகளாகத் திகழும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பிரஜா சோஷியலிஸ்ட் போன்ற வடநாட்டு ஆதிக்க வெறிபிடித்தோரை தலைவர்களாகக் கொண்டுள்ள கட்சிகள் சமுதாயத்தைப்பற்றி ஒரு சிறிதும் கவலைகொள்ளாதபோது தி. மு. கழகத்திற்கு ஏன் அதில் அக்கறை என்று பல வினு எழுப்பக்கூடும். இந்தக் கேள்வியினுடைய பதிலில்தான் இன்றைய தி. மு. கழகத்தின் வளர்ச்சி அடங்கியிருக்கிறது.

முற்போக்குக் கட்சி என்று தன்னை விளம்பரப்படுத்திக்கொள்ளும் கம்யூனிஸ்ட் கட்சி இதுவரை சமுதாயத்திற்காக என்ன சாதித்துள்ளது என்று கேட்பது ஊற்றார் உறவினர்களையும் பெற்றோர் மற்றோரையும் கொன்று குவித்த கொலைகாரனிடம் 'நீ உன் சகோதரனை நேசித்திருக்கிருயா? என்று கேட்பதற்கு சமமானதாகும். அப்படியானுல் கம்யூனிஸ்ட் கட்சியின் உள் நோக்கம் என்ன என்பதை ஆராய வேண்டும். மக்களை மடையர்களாக மதித்து, அவர்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டாமல், என்றென்றும் அடிமைகளாக அரசியல் அறிவு அற்றவர்களாக ஒற்றுமையின்றி ஒருவரோடொருவர் பகை கொண்டு வாழ ஒரு சூழ்நிலையை உண்டாக்க வேண்டுமென்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் குறிக்கோள். கம்யூனிஸ்ட் அரசாங்கம் என்பது தனி நபர் ஒருவனின் யதேச்சாதிகாரத்தை குறிக்கிறது. உதாரணமாக இன்று ரஷ்யாவில் குருஷ்சேவ் இட்ட கட்டளைப்படி அரசாங்கம் நடைபெற்று வருகிறது. ரஷ்யாவில் கம்யூனிஸ்ட கட்சி தவிர மற்ற அரசியல் கட்சிகளுக்கு இடமில்லை. எனவே அரசாங்கம் தவறுதலான பாதையில் மக்களை இழுத்துச் சென்ருல் அதைத் தட்டிக் கேட்பதற்கு எந்த ஒரு எதிர்க் கட்சியும் இல்லை ரஷ்ய நாட்டின் தலைவிதி கம்யூனிஸ்ட் கட்சியின் தூணுக கருதப்படும் குருஷ்சேவின் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதே முறையைத்தான் இந்தியாவிலும் நமது காம்ரேடுகள் கொண்டு வரப் பிரயத்தனப்படுகிருர்கள். அண்மையில் உள்ள கேரள அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியினர் செயல் முறையைக் கூர்ந்து பார்த்தால் "தங்கள் கட்சி தவிர வேறு எந்தக் கட்சியும் நாட்டில் இருக்கக்கூடாது" என்கிற ஒரு மனப்பான்மை சர்வாதிகாரப் போக்கு நமக்குப் புரிபடும். கேரளத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபொழுது கம்யூனிஸ்ட் யூனியன் உதவித் தலைவர் தோழர் செல்லையா உண்ணுவிரதம் இருந்தபொழுது மாற்றுக் கட்சியை சேர்ந்த மற்றத் தொழிலாளத் தோழர்களின் எலும்புகளை மாலையாக கோர்த்து, அவர்கள் இரத்தக்குளத்திலே நீச்சல் விளையாட்டு நடத்தியதை நாம் மறந்தாலும் நாடு மறந்துவிடத் தயாராக இல்லை. மூணுரில் உள்ள I. N. T. U. C. அலுவலகத்தை தாக்குவதற்கும் I. N. T. U. C. உதவித் தலைவரான தோழர் குப்புசாமியை மயக்கம் வரும் வரை அடிப்பதற்கும் கேரளக் கம்யூனிஸ்ட் ரௌடிகளுக்கு போலீஸ் பாதுகாப்பு அளித்ததையும் நாடு மறந்துவிடவில்லை. தம்மைத் தவிர நாட்டில் யாரும் நடமாடக்கூடாத என்கிற கீழ்த்தர உணர்ச்சிக்கு உட்பட்டு சமுதாயத்தில் அங்கம்வகிக்கும் மாற்றுக் கட்சியினரையும் மாக்களாக நடத்துவது கம்யூனிஸ்ட் கட்சியின் உன்னதக் கொள்கை! நாமெல்லாம் இனவழிப்படி திராவிடர்; மொழிவழிப்படி தமிழர் என்று ஒற்றுமையாக வாழ்ந்துவந்த தமிழ் இனத்தில் செட்டியார், பிள்ளை, நாடார், முதலியார், வன்னியர், பள்ளர், பறையர், மறவர் என்று ஆயிரமாயிரம் ஜாதிப் பிரிவுகளைப் புகுத்தி நம்மைப் பிரித்து வைத்த தீயோரைச் சாடுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சி பயப்படுகிறது. ஏன்? மக்கள் அறிவு பெற்றவர்களாக, படித்தவர்களாக, அநீதியை அநீதி என்றும் கொடுமையை கொடுமை என்றும் எதிர்த்துக் கேட்பவர்களாக நெஞ்சுரம் பெற்றவர்களாக, நேர்மையுள்ளவர்களாக மாறிவிட்டால் ரஷ்யாவில் நடைபெறுகின்றகொடுங்கோலாட்சி முறையை, தனி நபரின் யதேச்சதிகாரத்தை, ஒரே ஒரு கட்சியின் ஆதிக்கத்தை இங்கு ஏற்படுத்த முடியாமல் போய்விடுமே என்கின்ற அச்சம். கம்யூனிஸ்ட் அரசாங்கம் ஏற்படுவதற்கு அறியாமை என்கின்ற மருந்தை மக்களுக்குப் புகட்டவேண்டும். ஆகவேதான் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி இதுவரை சமுதாயச் சீர்திருத்தத்தை ஒதுக்கியே வைத்திருக்கிறது. கண்துடைப்பிற்காவது சமுதாயச் சீர்திருத்த மாநாட்டைகம்யூனிஸ்ட் கட்சி கூட்டியிருக்கிறதா என்ருல் அதற்கும் இல்லை என்ற பதில்தான் கொடுக்கப்படுகிறது. ஆனுல் காங்கிரஸ் கட்சி மக்களைச் சுரண்டுவதற்கு, நல்லது தங்களால் செய்ய முடியவில்லை என்பதை வெளிக் காட்டாமல் இருக்க 'உயர்ந்தவன் தாழ்ந்தவன்' என்கின்ற கீழ்த்தரக் கொள்கைக்கு, முதலியார் பிள்ளை, நாடார் போன்றவர்கள் உயர்ந்தவர்கள் பள்ளன் பறையன் முதலியவர்கள் தாழ்ந்தவர்கள் என்கின்ற ஒரு சூது மனப்பான்மைக்கு ஊக்கம் அளித்தும் வருகிறது. புரட்சி என்பதற்கு இன்றையக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல் முறைகளை விளக்கமாக எடுத்துக் கொண்டால் கம்பர் சீதையை வர்ணித்த பாங்கும் கைகேயி தசரதனிடம் கேட்ட வரமும் விளக்கமாகிவிடும். 1917-ல் நடந்த ரஷ்யப் புரட்சி ஜார் மன்னனின் ஆட்சி முறைக்கே சாவு மணி அடித்தது. 18-ம் ஆண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் தொழிற் புரட்சியினுல் பொருட்கள்உற்பத்திக்காகப் புதுமையான யந்திரக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. கைகளினுல் பொருட்களைச் செய்யும் பழையமுறை அடியோடு மறைந்து புதுமையான பல மெஷின்கள் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே புரட்சி என்பது பழைய முறைகளை அடியோடு ஒழித்துப் புது முறைகளை ஏற்படுத்துவது ஆகவே சமுதாயப் புரட்சி என்பது சமுதாயத்தில் நிலவி வருகின்ற மூடப் பழக்க வழக்கங்களை—குருட்டு நம்பிக்கைகளை ஒழித்துக் கட்டி புது உலகிற்கு வழி காட்டுதல். உதாரணமாக ஜாதியை ஒழிப்பதற்கு தி. மு. கழகம் முதன் முதலாக கலப்பு மணமே சிறந்த வழி எனச் சொல்லிச் செயல்மூலம் காட்டிற்று. நமது அறிஞர் அண்ணு அவர்கள் ஆயிரக்கணக்கான கலப்பு மணங்களை நடத்தி வைத்து ஆயிரம் ஆயிரம் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது புதியதோர் சமுதாயம் உருவாக்க வழி கோலினுர். "இந்தக் கலப்பு மணத்தை நடத்தினுல் சமுதாயம் எதிர்க்குமே; நாளை நமது கட்சி வளராதே; நம் செல்வாக்கு மறைந்து விடுமே" என்று கவலைப்பட்டு, சமுதாயத்திற்கு ஒத்து ஊதியது, கொடி தூக்கியது கம்யூனிஸ்ட் கட்சி. ஆனுல் இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற தலைவனும் அறிஞர் அண்ணுவின் சமுதாயப் புரட்சியை எதிகால சமுதாயம் வாழ்த்தும் என்பது நாம் சொல்லி பிறர் தெரிய வேண்டியதல்ல. நம்மிடைய உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் குருட்டு நம்பிக்கைகளையும் மூடப் பழகக வ்ழக்கங்களையும் ஒழித்துக் கட்டினுல் நல்லதொரு அரசாங்கம் ஏற்பட வழி பயக்கும் எனக் கூறினுர் அறிஞர் அண்ணு. 'ஒரு நாட்டில் உள்ள அரசாங்கம் அந்த நாட்டில் உள்ள சமுதாயத்தின் பிரதிபலிப்பு' என்ருன் அரசியல் அறிஞன் அரிஸ்டாட்டில். நல்லதொரு அரசாங்கம் ஒரு நாட்டிற்கு தேவையானுல் அந்த நாட்டில் நல்ல ஒழுக்கமும் கல்வி முறையும் உள்ள ஒரு சிறந்த சமுதாயம் இருக்க வேண்டும் என்ருன் பிளேட்டோ. சீரழிந்து செம்மையற்றுச் சிதறிப் போன மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில், ஏற்றத் தாழ்வுகளும், பொருமையும் பொச்சரிப்பும் அரசியல் அறிவு அற்ற ஆமைகளும் அடங்கிய ஒரு சமுதாயத்தில் ஜனநாயகம் வெற்றி பெருது என்ருன் இத்தாலிய அரசியல் அறிஞன் மாக்கியவல்லி. சமுதாயச் சீர்திருத்தப் பணியில் கடந்த 10 ஆண்டுகளாக அண்ணுவும் அவர் தம் தம்பிமார்களும் ஈடுபட்டு இழி மொழியும் வன்சொலும் ஏசலும் தூற்றலும் பெற்று சமுதாயத்தைச் சீர்திருத்திய பிறகுதான் இன்றைய தினம் அரசியலில் ஈடுபட்டிருக்கிருர்கள். சமுதாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும்; ஜாதிபேதம் ஒழியவேண்டும்; தமிழன் என்று ஒவ்வொருவரும் தன்னை கருதவேண்டும் என்பதற்கு தி. மு. கழகத் தலைவர்கள்தான் தங்கள் பெயர்களை மாற்றி

— 11-ம் பக்கம் —

"தென்றல்"

ஆருவது ஆண்டுத் தொடக்க இதழ்

20-6-'59 அன்று வெளிவருகிறது.

அறிஞர் பலர் எழுதுகின்றனர்.

கண்ணதாசனின் கவிதையும் கட்டுரையும் இடம் பெறுகின்றன.

பக்கங்கள் 16] ★ [விலை 16 காசு

விற்பனையாளர்கள் தேவையை முன்கூட்டித் தெரிவிக்கவும்.

"தென்றல்" :: சென்னை-6.

# வேழம் உலவும் ஈழ நாட்டினிலே!

இன்று ஆட்சிபுரியும் பெரும்பான்மைக் கட்சியான ஒற்றுமை முன்னணிக்கட்சி (எம். இ பி.) ஆட்சி மன்றத்தில் தன் பெரும்பான்மையை இழந்து தவிக்கிறது. புரட்சி லங்கா சம சமாசக் கட்சியின் தலைவர் வேளாண்மைத்துறை அமைச்சர் பிலிப்குணவர்தனவும் அக்கட்சியின் மற்றொரு அமைச்சர் வில்லியம் டி சில்வாவும் இக்கட்சியை சாந்த மற்ற உறுப்பினரும் கடந்த மே மீ 10 உ எம். இ. பி. ஆளும் கட்சியிலிருந்தும் அமைச்சர் அவையிலிருந்தும் விலகி விட்டதனால், எம் இ பி. யின் பலம் 47 உறுப்பினரைக் கொண்டதாகக் குறைந்துவிட்டது. 6 நியமன உறுப்பினர்கள் உள்ளிட 101 இடங்களைக் கொண்ட ஆட்சிமன்றத்தில் பேரமைச்சர் பண்டாரநாயக்கா பெரும்பான்மை பலமின்மையால் ஆட்சிமன்றக் கூட்டத்தை 3 மாதங்கள் ஒத்திபோட்டுவிட்டுத் தம் கட்சிக்கு ஆள்பிடிக்க முனைந்திருக்கிறார்.

எதிர்க்கட்சி ஒன்றாக இல்லை. நவலங்கா சமசமாசக் கட்சித் (என் எல். எஸ். எஸ். பி.) தலைவர் டாக்டர் என். எம். பெரயரா தம் கட்சி பலத்தைக் கொண்டு மாற்று அமைச்சர் அவை அமைக்கும் நிலையில் இல்லை. யாழ்ப்பாணத் தமிழர் தலைவர் எஸ். சே. வி. செல்வநாயகம் தமது பெடரல் கட்சி ஒத்துழைப்பை அளித்தாலும் டாக்டர் பெரயரா கட்சி ஆட்சி ஏற்கமுடியாது.

பொதுஉடைமைக் கட்சி பீட்டர் கெனமன், டாக்டர் விக்ரமசிங்கா என்ற இரண்டே உறுப்பினர்களைக் கொண்டது. இக்கட்சி டாக்டர் பெரயரா ஆட்சிக்கு வருவதை இயன்ற அளவு எதிர்க்கும்; முடிந்த மட்டும் முட்டுக்கட்டை போடும்.

நாட்டிலுள்ள தொழிலாளர் அமைப்புக்களும் உழவர் அமைப்புக்களும் நவலங்கா சமசமாசக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரயராவையும் புரட்சி சமசமாசக் கட்சியின் தலைவர் (வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்து விலகிய) பிலிப் குணவர்தனவையும் பின்பற்றுகின்றன.

பொதுவுடைமைக் கட்சியின் தலைவர் பீட்டர் கெனமன் ஒரு பறங்கி மரபினர். உயர்நீதிமன்ற நீதிபதியின் மகன். நிறைந்த ஆற்றலும் பேச்சு வன்மையும் பெற்றவர். ஆனால் பௌத்த சிங்களவராக இல்லையாயின் இன்றைய சிங்கள அரசியலில் யாரும் செல்வாக்கும் பெறுவதற்கில்லை.

பொதுவுடைமைக் கட்சியாளர் எம். இ. பி. அரசாங்கத்தை புரட்சி சமசமாசி பிலிப்குணவர்தன அமைச்சராக இருந்தவரை ஆதரித்தனர். பிலிப் குணவர்தன விலகியதும் தங்கள் ஆதரவை எம். இ. பி.க்கு அளிக்க மறுக்கின்றனர்.

1956 தேர்தலில் பண்டாரநாயக்கா ஆட்சியைக் கைப்பற்ற மக்களுக்கு எண்ணற்ற வாக்குறுதிகளை வாரி இறைத்தார். பௌத்த பிக்குகளும் இவரை ஆதரித்து மக்களிடம் பிரச்சாரம் செய்தனர். சிங்களம் ஒன்றே ஆட்சிமொழி ஆக்கப்படும் என்று பண்டாரநாயக்கா உறுதி கூறினார். ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு 'சிங்களம் மட்டும்' சட்டத்தை சிறுபான்மையோரின் பெரிய எதிர்ப்புக்கிடையில் நிறைவேற்றினார். சட்டம் பெயரளவில்தான் உள்ளது. செயலில் அமுலாக்க முடியாது விழிக்கிறார்.

இந்தச் சட்டம் அநீதியானது. சிறுபான்மை சமூகத்துக்கும் துரோகம் செய்வது என்று தமிழர் ஒன்றுதிரண்டு எதிர்த்தனர். சிங்களவர் இவ்வெதிர்ப்பைக் கண்டு கொதித்தனர் இதனால் 1958 மே மீ 26 உ பெரிய வகுப்புக்கலகம் நாடெங்கும் தலைவிரித்தாடிற்று. வீடிழந்தோரும் மனைவி மக்களை இழந்தோரும் ஆடை ஆபரணங்களை இழந்தோரும் ஆயிரக்கணக்கினர். இக்கலகத்தில் 154 பேர் இழந்தனர் என்று அரசாங்கம் கூறுகிறது. அடங்காத் தமிழர் முன்னணிக்கட்சியின் தலைவர் சுந்தரலிங்கம் முதலிய பல அரசியல் தலைவர்களோ 1500 பேர் என்று கூறுகின்றனர்.

பேரமைச்சர் பண்டாரநாயக்காவின் கட்சியின் பெயர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி. இதன் ஏழாவது ஆண்டு மாநாடு அண்மையில் குருநகலையில் நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொள்ள வருவரென எதிர்பார்த்த மக்கள் 25000; ஆனால் வந்திருந்த மக்கள் 2000 பேர்தாம். இவரை ஆதரிக்கும் ஆட்சி மன்ற உறுப்பினரும்பெரும்பான்மை அமைச்சர்களும்கூட இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபெற வரவில்லை. மாநாடு முடிய வேண்டிய நாளுக்கு அரை நாள் முன்னதாகவே முடிந்துவிட்டது. தீர்மானங்களை விரைவாகப் படித்து நிறைவேற்றியதாக அறிவித்துவிட்டு மாநாடு முடிந்துவிட்டதாக அறிவித்துவிட்டனர். ஆதரவு குறைந்துவிட்டதற்கு இது அறிகுறி. இம்மாநாட்டிலே பேரமைச்சர் பண்டாரநாயக்கா தம் கட்சியின் அடிப்படை நோக்கங்களை வெளியிட்டார் அவை (1) நடு நிலைமையும் வெளியார் விஷயத்தில் தலையீடின்மையும். (2) எல்லா நாடுகளுடனும் நட்புறவு (3) எவரும் அந்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதைவன்மையாகக் கண்டிப்பது. (4) மேலும் அந்நாட்டில் நிலவும் இனம், சமயம், மொழிச் சிக்கல்களின் வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை ஏற்படுத்துவது. பெரும்பான்மையோர் உரிமையைக் காப்பதோடு சிறுபான்மையோருக்கு நியாயம் வழங்கப்படும் என்றும் உதாரணமாக சிங்களமே ஆட்சி மொழி எனினும் தமிழும் ஓரளவு இடம்பெறும் என்றும் தமிழர்க்குத் தமிழில் கல்வி அளிக்கப்படும், அரசாங்க அலுவல் தேர்வுகள் தமிழில் நடத்தப்படும் என்றும் அரசினர்க்கு வரும் தமிழ்க் கடிதங்களுக்குத் தமிழிலேயே மறுமொழி அனுப்பப்படும் என்றும் விளக்கினர்.

நம் கட்சி ஜனநாயகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. சமுதாயத்துக்கு நீதி வழங்கும் சம தர்மத்தை (சோஷலிஸம்) கொள்கையாகக் கொண்டது. கலாசாரம் சமயம் இவைகளை ஆதரித்து வளர்க்கும் நோக்கமுடையது ஆனால் பொதுவுடமைக் கொள்கையை எதிர்ப்பது. தனிப்பட்டவர் ஆதிக்கத்தையும் எதிர்ப்பது" என்றும் கூறினார்.

தமிழரெல்லாம் இலங்கையை விட்டு வெளியேறினால்தான் நான் நிம்மதியாகச் சாவேன் என்று நஞ்சு உமிழ்ந்த பண்டாரநாயக்கா இன்று பேரமைச்சர் ஆனபிறகும் தமிழர்களை வெளியேற்ற முடியாமல் இருதலைக் கொள்ளி எறும்புபோல் திண்டாடுகிறார். காரணம் தமிழர் இன்றி அந்நாடு வளம்பெறாது.

வழி வழித் தமிழர் (யாழ்ப்பாணத் தமிழர்) 10 லட்சமும் தேயிலைத் தோட்டத் தமிழர் 10 லட்சமும் ஆக இருபது லட்சம் தமிழ் இனத்தவர் அந்நாட்டில் வாழ்கின்றனர். 90 லட்சம் மக்கள் வாழும் நாட்டில் ஏறத்தாழ நான்கில் ஒரு பங்கினர் குடிஉரிமை இன்றி, வாக்குரிமையின்றி, அரசியல் உரிமை எதுவுமே இன்றி வாழ்வது இந்நாடு ஒன்றில்தான்.

யாழ்ப்பாணத்துத் தமிழர் இலங்கை அரசாங்க அலுவலகங்களில் 60 சதவிகிதத்தினர் வேலை பார்ப்பதாகவும் அதனால்தான் சிங்கள மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும் சிங்கள மக்கள் கூறி யாழ்ப்பாணத்தவர்மீது பொறாமையும் ஆத்திரமும் கொண்டுள்ளனர்.

வாணிபத்திலும் தென்னிந்தியர் தமிழர் நாட்டைச் சுரண்டுவதாகச் சொல்லி அவர்களையும் சிங்களர் வெறுக்கின்றனர்.

நாட்டு வருமானத்தில் 60 சதவிகிதம் தேயிலைத் தோட்டத்தினால் வருகிறது. இதை உழைத்துக் கொடுப்பவர் தமிழ்த்தொழிலாளிகள். இவர்கள் தமிழ்மொழி பேசுவதால் இவர்கள்மீதும் வெறுப்பு. இவர்களை வெளியேற்றவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வெளியேற்றினாலோ நாடு வரண்டுபோகும். வறுமை பற்றிக் கொள்ளும். இருக்கவிட்டாலோ இக்கூட்டம் பெருகி பெரும்பான்மை இனமாக மாறி, பழைய பாண்டியர், சோழர் ஆட்சிபோல் தமிழர் ஆட்சி ஏற்பட்டுவிடுமோ என்ற சிங்களத் தலைவர்களுக்குப் பீதி!

இருதலைக்கொள்ளி எறும்பாய் பண்டாரநாயக்காவும் அவர் போன்ற மற்றோரும் அவதிப்படுகின்றனர்.

எம். இ. பி ஆட்சி ஏற்பட்டதால் நாட்டில் வளம் பெருகவில்லை. தொழில் பெருகவில்லை வேலையில்லாத திண்டாட்டம் ஒழியவில்லை. வாழ்க்கைச் செலவு உயர்ந்து வருகிறது வேலை நிறுத்தங்களும் தொழிலாளர் இடையில் அமைதியின்மையும் வளர்ந்து வருகின்றன. பொருள் வளத் திட்டம் எதையும் இக்கட்சி கடந்த மூன்றாண்டுகளில் நிறைவேற்ற முடியவில்லை.

எம். இ. பி. கட்சி பஸ் போக்குவரத்தையும் துறைமுக வேலையையும் தேசீய மயமாக்கியது. பலன் என்ன? பஸ் சேவை விஸ்தரிக்கப் படவில்லை. துறைமுக வேலை, துரிதமாக்கப்படவில்லை. முன்பு இருந்த நிலை எவ்வளவோ தேவலை. வேளாண்மைத் துறை அமைச்சர் பிலிப் குணவர்தன முற்போக்குவாதி. மக்கள் நலனில் அக்கறையுடையவர். இவர் தளரா முயற்சியால் வலது சாரி அமைச்சர்கள், எதிர்ப்புக்கிடையில் நெல் வயல் காணி உடைமை வரம்புச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினர். ஏழை மக்கள் வரவேற்றனர். பிலிப்பின் செல்வாக்கு பெருகிற்று. வந்தது வயிற்றெரிச்சல் மற்ற அமைச்சர்களுக்கு. சில்லறைக்குழப்பங்களை உண்டுபண்ணி பிலிப்பின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைப் போட்டனர். இன்னும் ஒரு சட்டத்தையும் கொண்டு வந்தார் உழவர் நலனுக்காக. கூட்டுறவுபேங்க்சட்டம் தான் அது. இதனால் பிலிப் குணவர்தன செல்வாக்கு மேலும் ஓங்கும் என்பது நிச்சயம். உழவுக்கு கடன் உதவுவது இச்சட்டத்தின் நோக்கம்; அமைச்சர் அவையிலிருந்த மற்ற அமைச்சர் பதின்மர் கல்வி அமைச்சர் தக நாயக்காவை தங்கள் கோட்டியின் தலைவராகத் தேர்வு செய்தனர். பேரமைச்சர் பண்டாவுக்குத் தங்கள் கூட்டணி எதிர்ப்பைத் தெரிவித்தனர். பிலிப்பை நீக்காவிடில் எங்கள் ஒத்துழைப்புக் கிடையாது என்றனர். பண்டாரநாயக்காவுக்கு பெரிய மண்டையிடியாயிற்று. எதிர்ப்புக் காட்டிய அமைச்சர் பதின்மர் பயமுறுத்தலுக்குப் பணிந்தார் பண்டா. பிலிப் குணவர்தனவும் அவர் குழுவினரும் எம். இ. பி. யிலிருந்து வெளியேறினர்.

இன்றைய ஆட்சி மன்றம் கலைக்கப்பட்டு மறு தேர்தல் நடைபெறும் காலம் அண்மையில் வரலாம். புதிய ஆட்சிமன்றத்தில் பண்டாரநாயக்கா, டட்லி சேன நாயக்கா (யு என். பி) டாக்டர் என். எம். பெரயரா (என். எல். எஸ். எஸ். பி.) பிலிப் குணவர்தன (வி. எல் எஸ். எஸ் பி) இன்றைய அமைச்சர் தக நாயக்கா (பாஷா பெரமுன) பீட்டர் கெனமன் (பொதுஉடைமை) யாழ்ப்பாணத் தலைவர் எஸ். சே. வி. செல்வநாயகம் (தமிழ்நாட்டுப் பிரிவினை கோரும் கட்சி) இத்தனை தலைவர்களும் ஆளுக்கொரு சிறிய கட்சிகளோடு ஆட்சி மன்றத்தில் சுண்டைக் காய்களைப் போல் மூலைக்கொருவராக இடம் பெறுவர். நாட்டில் நிலையான ஆட்சி ஏற்பட வழியில்லை. இன்றைய கவர்னர் ஜெனரல் ஓ. சி. குணதிலகாவின் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டாலும் வியப்புறுவதற்கில்லை.

—ஆ. நடராசன்.



# மரத்திற்கு நாணிய நங்கை!

ஒரு நாள் கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகிய நெய்தல் நிலப் பகுதியிலே இரு பெண்கள் உரையாடிக் கொண்டிருந்தனர். ஒருத்தி தமிழ்ச் செல்வி என்கிற தலைவி. மற்றவள் அவள் தோழி வள்ளி. நற்றிணையில் வரும் ஒரு பாடலைப் பற்றி அப் பெண்கள் உரையாடிக் கொண்டிருந்தனர். அவ்வுரையாடல்களைக் கவனிப்போம்.

**தமிழ்ச் செல்வி:** வள்ளி! (தோழியை நோக்கி) வலம்புரிச் சங்குகள் ஒலிக்க விளங்கும் இக் கடல்துறை நமது ஊருக்குப் புதிதாக வந்த பாணர்களின் இசைப் பாட்டைப் போல எவ்வளவு இனிமையாக இருக்கிறது? நான் சொல்லவில்லை— நற்றிணையிலே ஒரு குறிப்பு. இக்கடல்துறையையும் பார்த்துச் சொல்லவில்லை.

**வள்ளி:** ஆம் செல்வி! கடல் துறையே ஒரு இனிமை. இக்கடலுக்கும் கடல் சார்ந்த பகுதிக்கும் "நெய்தல்" நிலம் எனப் பெயரிட்டனர் நமது முன்னோர். அது மட்டுமா செல்வி! இந்நிலப் பகுதியை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், என நால் வகையாகப் பிரித்தனர். அந்தந்த நிலத்திற்கு உரிய மக்களின் ஒழுக்கமுறையும், உணவும், இசையும், விலங்குகளும் இன்ன பிறவற்றையும் அடிப்படையாகக் கொண்டு இப்படிப் பிரித்திருக்கிறார்கள். இன்று எந்தக் கண்டமாயினும் இந் நால்வகை முறையும் பொருந்தும்.

**த. செல்வி:** ஆமாம் தோழி! தொல்காப்பியர் இற்றைக்குச் சுமார் 3,000 ஆண்டுகட்கு முன்னரே இப்படி நிலத்தை நால்வகையாகப் பிரித்து, அந்தந்த நிலத்திற்கு உரிய தட்ப வெப்ப நிலைமைக்கு ஏற்றபடி அங்கு வாழும் உயிர் இனங்களின் வகைகளும், பயிரினங்களும், மக்கள் ஒழுகலாறுகளையும் கடமைகளையும் பற்றிக் கூறுவது, வியந்து போற்றுதற்கு உரியதாகவே இருக்கிறது. இன்று உலகிடைக் காணும் பல்வேறு மொழி இலக்கணங்களில் அந்தந்த மொழிக்கு உரிய இலக்கணக் குறிப்புக்களே காணப்படுகின்றன. ஆனால் நமது தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறவந்த பெரியார், மொழி இலக்கணத்தோடு அமைவுறாது-அம்மொழி பயிலும் உலகியலின் தத்துவத்தையும் மக்களின் பண்பாட்டையும் குறித்துப் "பொருள் இலக்கணம்" என்ற ஒரு பகுதியை வகுத்துக் கூறிச் சென்றார். என்றால், அதனை எண்ணி எண்ணி மகிழ்தற்கு உரியதாகவே இருக்கிறது.

**வள்ளி:** செல்வி! ஏதோ புதியதாக வந்த பாணர்களின் இசையைப்போல் இருந்தது வலம்புரிச் சங்குகளின் ஒலி என்றாயே-தொடர்ந்து அதனைச் சொல்லவில்லையே?

**த. செல்வி:** ஆம்! அதற்கும் தொடர்புள்ளதுதான் நம் பேச்சு. இம்மாதிரி கடல்துறையை — கடலையும் கடல்சார்ந்த இடத்தையும் "நெய்தல்" எனக் கூறினர். இதுபோன்ற ஒரு இடத்திலே— தமிழகத்தின் ஒரு பகுதியிலே நிகழ்ந்த செய்திதான். அதாவது ஒரு தலைவி தன் தோழியர்களுடன் மணலில் புன்னை விதை ஒன்றை மறைத்து மறைத்து விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டின் முடிவிலே அப் புன்னை விதையை மணலிலேயே விட்டுவிட்டு மறந்து, இல்லம் நோக்கிச் சென்றுவிட்டார்கள்.

**வள்ளி:** பிறகு!

**த. செல்வி:** பின்னர் அவ்விடத்தே ஒரு நாள் தலைவி சென்று பார்க்கையில், அதற்கு முன் அவ்விடத்தில் மழைபெய்த காரணத்தால் அப்புன்னை விதை வேர் ஊன்றி முளைத்து நின்றது. அத்தலைவியும் தோழிகளும் அன்று முதல் அப்புன்னைக்கு நெய்யும் பாலும் கலந்த நீரை ஊற்றி வளர்த்து வரலானாள். இளமையும் விளையாட்டும் கலந்த காரணத்தால் புன்னைச் செடியை வளர்ப்பதிலே ஒரு புதுமையைக் கண்டாள். தனக்குத் தாய் தரும் நெய்யையும் பாலையும் அச்செடிக்குப் பெய்வித்து அதனை அன்புடன் வளர்த்து வரலானாள்.

**வள்ளி:** ஆம். தமிழ்ச் செல்வியே! தொல்காப்பியத்தைப் பற்றி பேசினோமே, அதில் தாவரத்திற்கும் உயிர் உண்டு என்று 3,000 ஆண்டுகளுக்கு முன்பே பேசப்பட்டது. ஆனால் விஞ்ஞான முறைப்படி மக்களுக்கு அதனை உணர்த்துவதற்கு 20-ம் நூற்றாண்டில் ஒரு ஜே. சி. போஸ் என்ற விஞ்ஞானி வேண்டியதாய் இருந்தது. தலைவியே! நமது தமிழ் நூல் வல்லார் தாவரவியலில் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னரே எவ்வளவு தேர்ச்சி பெற்று இருந்தனர் என்பதை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் உள்ளம் மகிழ்கிறது. பிறகு என்ன நடந்ததோ?

**த. செல்வி:** ஆம்! புன்னையைப் பேணி வளர்க்கும்போது ஒரு நாள் அத்தலைவியின் தாய், அச்செய்கையைக் கூர்ந்து கவனித்துவிட்டாள். உடனே மகளையும் தோழிகளையும் நோக்கி, "நீவிர் வளர்த்து வரும் புன்னையானது நும்முடன் பிறந்த தங்கையாகும் தகுதியுடையது, கண்டீர்" என்று அதன் சிறப்பினை எடுத்துக் கூறினாளாம். ஓரறிவு உடைய புன்னைச் செடி ஆறறிவு படைத்த நங்கைக்குத் தங்கையாயிற்று!

**வள்ளி:** மேலும் என்ன நடந்ததோ?

**த. செல்வி:** பிறகு நடந்ததைச் சொல்லவும் வேண்டுமா. புன்னை தளிர்த்து ஓங்கி வளர்ந்தது. தலைவியும் ஓங்கி வளர்ந்து பருவம் எய்திவிட்டாள். பூரிப்பும் இளமையும் செழித்துக் காணப்பட்ட தலைவி தன் நிலைக்கு ஏற்ற ஒரு தலைவனை நாடினாள். தலைவனுடன் தலைவியின் களவொழுக்கம் நீடித்தது. ஒரு நாள் அத்தலைவன் தன் காதலியைச் சந்திக்க இப்புன்னை மர நிழல் தகுதியுடையது எனக் கருதினான். இதனைக் கண்ட தோழியர், அப்புன்னையின் வரலாறு அறியாத தலைவனைப் பார்த்து நகைத்தவர்களாய், அவனது அறியாமையைக் கண்டு பரிதாபப்பட்டவர்களாய், "தலைவனே! இப்புன்னை மரம் எமது தலைவியின் இனிய தங்கைக்கு ஒப்பான தகுதி உடையது. இன்னும் எத்தனையோ மரங்கள் இருக்கின்றன. அங்கு சென்று விடுங்கள். உடன் பிறந்தார், சுற்றத்தார் முதலானோர் அயலில் இருக்கும்போது தன் காதலனோடு நகைத்து விளையாட நாணுவாள் எம் தலைவி" எனக் கூறினராம்.

**வள்ளி:** செல்வி! இப்பொழுதுதான் எனக்கு நினைவு வருகிறது. இது நற்றிணையில் ஒரு பாட்டு. அன்றொரு நாள் நமது தமிழ்ப் பேராசிரியர் மயிலை. சிவமுத்து இதனை விளக்கிக் கூறும்போது நான் என்னையே மறந்தேன். அவ்வளவையும் இப்பொழுது மீள நினைப்பின் காலம் அதிகமாகும்.

**த. செல்வி:** ஆம். தோழி! நற்றிணையில் வரும் அப்பாடலில் பொதிந்த பொருளும்—பண்பாடும் எண்ணி எண்ணி மகிழ்தற்கு உரியன. புன்னை மரத்தைத் தன்னுடன் பிறந்த தங்கையாக நினைந்து அதன் முன் தலைவனுடன் விளையாட மறுத்த தலைவியின் பண்பாட்டையும், தாய் அப்புன்னையை தன் மகளின் தங்கை என்று கூறிய பண்பாட்டையும் நீள நினைந்து-அறிந்து-துய்த்து மகிழ்தற்கு உரியது. அந்த நற்றிணையில் வரும் தலைவி புன்னை மரத்திற்குமட்டும் நாணவில்லை. அத்தலைவி, பிறர் பார்க்கும்படி தலைவனைச் சந்தித்து நகைத்து விளையாடுவதற்கு அஞ்சுவதாகக்கூடப் பொருள்படக் கூறுவது கூறல் மகிழ்தற்கு உரியது. தோழி! இந்தக் காலத்துப் பெண்களும் நாகரிக நகர்ப்புறங்களிலே உலவி வருவதைக் கவனிக்கிறாய். இவர்களுடைய பண்பாடு எங்கே? 2000 ஆண்டுகட்கு முன் ஒரு தலைவி தன் உள்ளத்தில் நினைந்த பண்பு எங்கே? இதோ பார்! நற்றிணையில் பெயர் தெரியாத அக்கவிஞனுடைய பாடலை — அவனது அழகிய தீந்தமிழ்ச் சொற்களாலேயே சொல்கிறேன். அவன் இப்பாடலை நமக்கு அறிவித்துவிட்டு அவன் பெயரை அறிவிக்காதது யார் குற்றமோ?

**"விளையாடு ஆயமொடு**
**வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த**
**காழ்முனை அகைய**
**நெய்பெய் தீம்பால்**
**பெய்தினிது வாளர்ப்ப**
**நும்மினுஞ் சிறந்தது**
**நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள்**
**புன்னையது சிறப்பே**
**அம்ம நாணுதும்**
**நும்மொடு நகையே**
**விருந்திற் பாணர்**
**விளரிசை கடுப்ப**
**வலம்புரி வான்கோடு**
**நரலும் இலங்குநீர்த்**
**துறைகெழு கொண்கநீ**
**நல்கின்**
**நிறைபடு நீழல்**
**பிறவுமா ருளவே."**

(பாடல் 172)

**வள்ளி:** செல்வி! தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாய்க் கூட்டி, தனித்த நறும் பாலும், தேனும், நெய்யும் கலந்து சுவைப்பதுபோல் இருக்கிறது இப்பாடலில் காணும் தலைவியின் பண்பாடும் அப்பண்பாட்டைக் கருதியே ஒரு தமிழ் மகளைப் பற்றிக் கூற வந்த ஒரு கவிஞர் "தமிழ் தழிய சாயலவர்" எனக் கூறுகிறார். ஒரு தமிழ் மகளை நமக்கு அறிமுகம் செய்யும்போதே இப்படி அம்மகளின் பண்பையும், அவள் தாய் மொழியின் பண்பையும் இரண்டறக் கலந்து இணைத்தாற் போலக் கூறும் மொழிகள் தமிழ்க் காவியங்களில் அல்லால் வேறு எங்கு காண முடியும்?

**-சிறுவை.**

**அனசூயா மோகனசுந்தரம்,**
மகளிர் மன்றம், சென்னை.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
நெ. 9, சங்குபிள்ளை, திண்டுக்கல் ரோடு, மதுரை.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

மலர் 5 | 13–6–'59 | இதழ் 52

# வாலிபர் முழக்கம்! விடுதலை விளக்கம்!!

**இனிய சேதி ஒலிக்கிறது! புதிய கொடி உயர்கிறது! உரிமை முழக்கம் வெல்கிறது! தன்னாட்சி தழைக்கிறது! வெள்ளையரின் பிடியால், குடியேற்ற நாடாகக் கிடந்த சிங்கப்பூர், தனிக் கொடி ஏற்றி விடுதலைபெற்ற இனிய சேதியைப் பாடுகிறது!**

மக்கள் செயல் இயக்கத்தினர் (People Action Party) இன்று அந்தத் தன்னாட்சி அரசை ஏற்றிருக்கின்றனர். "குட்டிநாடு வெல்ல முடியுமா? சிறுவர்கள் எடுத்த செயல் வெல்லுமா?" என்றெல்லாம் கேட்போர்க்கு இந்த வெற்றி நல்ல விடை. சின்னநாடான சிங்கப்பூருக்கு விடுதலை பெற்ற இவ்வியக்கமே இளைஞர்களால்தான் நடத்துப்பெறுகிறது. இதன் தலைவர் வயதே 38-க்குள்தான். சிறியவர்களாலும் முடியும்; குட்டிநாட்டையும் விடுவிப்பர் என்பதற்கு இதன் வரலாறு ஒரு சான்று!

1819-ம் ஆண்டு கிழக்கிந்தியத் தீவுகளின் ஒரு பகுதியான சிங்கப்பூரை ஜோகூர் சுல்தானிடமிருந்து, விலைக்கு வாங்கினார் சர். ஸ்டாம்போர்ட் ரேபிள்ஸ் என்ற வெள்ளை அதிகாரி. அக்கிழக்கிந்தியக் கம்பெனியதிகாரி விலைக்கு வாங்கியபோது அது பரதவர் வாழும் சிறிய ஊராகவே இருந்தது. படிப்படியாக வளர்ந்து நகரக் குடியரசான அதில், இன்று 15 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். ஆஸ்திரேலியாவில் ஆண்டொன்றுக்கு 100 ரூபாய்க்கு வெளிநாட்டு வணிகம் நடக்கின்றதென்றால், இங்கு 80 ரூபாய்க்கு நடக்கிறது. அவ்வளவு செல்வவளம். அல்லாமலும் பல தீவுக் கூட்டங்களின் நடுப்பகுதியில் இருப்பதால் வேறு, வணிக வளம் பெருகுகிறது. கிழக்கத்தியக்கடல் பகுதியில் ஆங்கிலேயரின் சிறந்த கடல் தளம் இந்த சிங்கப்பூர்த் துறைமுகம்தான். இதற்கடுத்தபடியாய்த்தான் இலங்கையின் திரிகோணமலையை வைத்திருந்தனர்.

இந்தத் தீவின் பழங்குடி மக்கள் மலாயர் தாம் என்றாலும், இன்று அன்னார் எண்ணிக்கை குறைவே! இதன் ஆட்சி வரலாறும் மக்கள்வரலாறும் மாறிவிட்டன. 10 இலட்சம் பேரான சீனர், மலாயரைச் சிறுபான்மையர் ஆக்கிவிட்டனர். இன்று உழைப்போரும், உருவாகி வரும் எதிர்காலச் சந்ததினரும் ஆன சீனர் கையில் தான் ஆட்சி வந்திருக்கிறது.

அண்மையில் நடந்து முடிந்த தேர்தல்களில் இச்சீனரின் இயக்கமான மக்கள் செயல் இயக்கத்தினர் 43 பேர் வென்றிருக்கின்றனர். இவர்களுள் மூவர் தமிழர். அவர்கள்முன் இருக்கும் கடமை அந்நாட்டு இளைஞர்க்குத் தக்க ஆக்கவேலைகளைத் தருதலே. தொழில் வளர்ச்சிக்கு இவ்விளைஞர் அணியின் திறன் திருப்பப்பட்டால், நாட்டில் நிலையான செல்வம் பெருக்கப்படும். அதற்கான முறை இப்போதுள்ள கல்வி முறையை மாற்றுவதாகும். புதிய நாட்டைப் படைப்பதற்கும், பொருளியலிலும் சமூகவியலிலும் புதுமை காண்பதற்கும் கல்விச் சீர்திருத்தமே துணைபுரியும் என மக்கள்செயல் இயக்கத்தின் தலைவரான டாக்டர் டோ சின் சாய் கருதுகிறார். அடுத்ததாக மக்கள் தொகையை இடத்திற்கு மீறிப் பெற்றுள்ள இத்தீவு மலாயாக் கூட்டரசுடன் இணைதலாகும். அக்கூட்டரசுடன் இணைதலால் பெருகிவரும் மக்கள் மலாயாவின் பல பகுதிகளிலும் குடியேறி இடநெருக்கடியைக் குறைத்துக் கொள்ளவும் கூடும். அத்தோடு இம்மண்ணுக்கே உரிய பண்பாடும் நாகரிகமும் வளர்ந்தோங்கும் தாயகத்துடன் இணைக்கப்பெற்ற பெருமையும் கிட்டும்.

அடுத்து, இவ்வியக்கத்தின் சார்பில் வென்று, விடுதலை அரசின் தலைமை அமைச்சராகி இருக்கும் திரு. **லீ குவான் யூ** அவர்களின் மொழிகளும் சிந்திததற்குரியன. 140 ஆண்டுகள் பிரித்தானியரின் அடிமைத்தளையில் சிக்கிக்கிடந்த இந்நாடு இன்று விடுதலை பெற்றிருப்பது, நாட்டு வரலாற்றோடு இவ்வியக்க வரலாற்றிலும் புதுமையைப் படைத்திருக்கிறது. 3-6-59 இரவு வந்த இவ்விடுதலை, இயக்கம் விரும்பியதை எல்லாம் கொண்டுவந்துவிடவில்லை. உள்நாட்டு விவகாரங்களில் நினைத்ததை எல்லாம் செய்ய வாய்ப்பிருக்கிறது. நிர்வாகத்தைக் கவனிக்க இங்கிலாந்து அரசியாரின் பிரதிநிதி ஒருவர் (யாங் டி பெருட்டன் நிகரர் எனப்படும் பதவியாளர்) இருப்பார். இப்போதைய ஆறு திங்களுக்கு சர். **வில்லியம் கூடி** என்பார் அப்பிரதிநிதியாக அமைகிறார். பின்னர் மற்றொருவர் வருவார். சிங்கை சட்டமன்றம் உள்நாட்டுச் சிக்கல்கள் எதையும் பரிசீலிக்கலாம். ஆனால், வெளிநாட்டுத் தொடர்பும் பாதுகாப்புத் துறையும் பிரித்தானியர் கையிலேயே இருக்கும். இந்த உரிமைகளும் கிடைக்கப் பெற்றபின்னரே இவ்வியக்கம் தன் முழு வெற்றியையும் பெற்றதாகும். எனவே இப்போது பெற்றிருக்கும் "டொமினியன்" நிலை இதன் வருங்கால முழு வெற்றியின் அறிகுறி எனலாம். இந்த வெற்றியை வைத்து, இன்னும் பல பெருமைகளைக் காணவேண்டியிருக்கிறது சிங்கை அரசு. இவ்வெற்றிகள் குவிய வாழ்த்துகிறோம்; வாழ்க! வாழ்க! இளைஞர் அணியின் உழைப்பு வெல்க! வளர்க! சின்னநாடு சிங்காரம் பலவும் பெறுக! பொலிக! ★

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

### வெள்ளையர்க்கு வசதிகள்

மதுரை மில்லில் ஆபீசர்கள் வாங்கும் சம்பளம் இந்தியாவில் பாரதப் பிரதமருக்குக்கூடக் கிடையாது. 1947-ல் மேல் அதிகாரிகளுக்கு மட்டும் ஆண்டுக்கு ஏழரை இலட்சம் ரூபாய் சம்பளம் கொடுத்தார்கள். ஆனால் இன்றோ மேல்அதிகாரிகள் மட்டும் ஆண்டுக்கு சுமார் 20 இலட்சம் ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள். 10 ஆண்டுகளில் சுமார் பன்னிரண்டரை இலட்சம் ரூபாய் அதிகம். அது தவிர மேலதிகாரிகள் குழந்தைகள் ஒவ்வொன்றுக்கும் 50 ரூபாய் அலவன்ஸ் - மேலதிகாரி மனைவிக்கு 250 ரூபாய் அலவன்ஸ்- "குளு குளு" வீடும், குளிர் இயந்திரமும், வீட்டிற்குத் தேவையான எல்லாச் சாமான்களும் கொண்ட வீட்டிற்கு வாடகை கிடையாது. ஒவ்வொரு ஆபீசரும் ஏறி ஊர் சுற்றுவதற்கும் தனிக் கார் - காருக்குப் பெட்ரோல் இனம் - காரோட்டிக்குச் சம்பளம் மதுரை மில் தருகிறது. மேலதிகாரிகளுக்கும், மனைவிமக்களுக்கும் இலவச மருத்துவ உதவி முதலியவைகள். அவர்கள் மனைவி, மக்களோ, (Food Tonic) சத்துணவு மருந்துகளை உண்டு கொழுக்கிறார்கள்.

### இயந்திர பேரம்...

இலண்டனிலிருக்கும் வெள்ளையன் சர். ஜேம்ஸ் டோக்கிறருக்கு 6 ஆயிரம் சம்பளம். இலண்டனிலிருக்கும் ஹார்வி ஏஜன்சி லிமிடெட் ஆன இவர்கள் கம்பெனிக்குப் பலநூறு பவுன் கொட்டிக் கொடுக்கிறார்கள். மாதந்தோறும் 25,000 கதிர்களுக்கு 500 ரூபாய் விதம் மானேஜிங் ஏஜன்சிக்குக் கமிஷன். துரும்பிலிருந்து இயந்திரங்கள் வரை எது வாங்கினாலும் மானேஜிங் ஏஜன்சிக்கு, சுமார் இரண்டரை சத விதம் கமிஷன். எதை இறக்கினாலும், விற்றாலும் மானேஜிங் ஏஜன்சிக்குக் கமிஷன். நூலை விற்றால் சுமார் 2 சத விதம் கமிஷன்; புதிய இயந்திரங்கள் வாங்கினால் கமிஷன்; நிர்மானித்தால் கமிஷன். இப்பொழுது புதுப்பித்தலும், புதிய இயந்திரங்கள் நிர்மானித்தலுமான செயலுக்கு 75 00000 ரூபாய் மத்திய சர்க்காரிடமிருந்து கடன் மதுரை ஆலை வாங்கியுள்ளது. சுமார் இரண்டரைக்கோடி ரூபாய்க்கு இயந்திரம் வாங்கப்படுமென சொல்லப்படுகிறது. வெள்ளையர்கள் அதிகமாகக் கொள்ளையடித்துச் செல்வதைதடுக்க ரிசர்வ் பேங் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்த ரிசர்வ்பேங்கை ஏமாற்றி பணத்தை இங்கிலாந்திற்குக் கொண்டு செல்ல இயந்திரங்கள் வாங்க இங்கிலாந்து கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து இயந்திர விலைகளை சுமார் 12 சத விதம் அதிகமாக விலையை ஏற்றி பில் அனுப்பச்செய்து, அவற்றை இங்கிலாந்திலிருக்கும் தங்கள் கம்பெனியான ஹார்வி பிரதர்ஸ் ஏஜன்ட் லிமிட்டெட்டுக்குத் தந்துவிட வேண்டுமென்று ஒப்பந்தம் செய்து வருவதாகத் தெரிகிறது. இதனால் சுமார் 31 இலட்ச ரூபாய் இங்கிலாந்திற்கு அனுப்பப்படும் என்று தெரிகிறது. இதனால் நம் நாட்டிற்கு இந்த வெள்ளைக்காரர்களால் இழப்பு எவ்வளவு என்பதை ஒருவாறு கணக்கிடவும்.

### ஜப்பான் இயந்திரங்கள்

தவிர, மிகக் குறைந்த விலையில் மிகச் சிறந்த ஜப்பானிய நூற்பு இயந்திரங்கள் கிடைத்தும் அவைகளை விட்டுவிட்டு மிகப் பழமையான மிக உயர்ந்த விலையில் ஆங்கிலேய இயந்திரங்கள் வாங்கும் காரணத்தை நாம் ஒருவாறு ஊகித்தறியலாம். இத்தகைய கொள்ளைக்கார வெள்ளைக்காரர்களை நம் நாட்டிலே விட்டுவைத்து, நம்மக்களின் இரத்தத்தையும் உறிஞ்சும் அட்டைகளாக இருப்பதைக் காட்டிலும் நாம் அடிமைகளாக இருந்திருப்பது மேலல்லவா? சுதந்திரம் வாங்கித் தந்துவிட்டோமென்று மார்தட்டிக் கூறும் காங்கிரஸ் சர்க்கார் தொழிலாளர்கள் பசியால் துடிதுடித்து சாவதை கண்டிருந்தும்-காணாத குருடர்கள்போல் இருப்பது ஏன்?

### சபாநாயகம் வந்தார்; போனார்!

மில் சென்ற ஆண்டு நஷ்டத்தில் ஓடிய உடன் வேலைப்பளுவை உயர்த்த வேண்டுமென்று கேட்ட பொழுது, தொழிற்சங்கங்கள் ஒன்று கூடி தொழிலாளர்கள் இப்பொழுதே தங்கள் சக்திக்கு மீறிய வேலையைச் செய்கிறார்கள். ஆகையால் நிர்வாகச் செலவுகளை குறைக்க வேண்டுமென்றும், வெள்ளையர்கள் கள்ளத்தனமாகக் கொள்ளையடிப்பதைத் தடுக்க வேண்டுமென்றும் கூறின. அதற்குச் சம்மதித்த 'கதர்ஜிப்பா சர்க்கார்' சபாநாயகம் அவர்களை நிர்வாகச் செலவு பற்றியும் - தொழிலாளர் தம் வேலைப்பளு குறித்தும் ஆலோசனை கூறும்படி கேட்டது. சபாநாயகம் கமிட்டி நிர்வாகத்தில் மானேஜ்மெண்ட் செய்த அயோக்கியத்தனத்தை அறிந்து, அவற்றையெல்லாம் கண்டுபிடித்து "கதர்ஜிப்பா சர்க்கா"ருக்கு தனது அறிக்கையை அனுப்பியது. அந்த அறிக்கையைக் கண்ட கதர்ஜிப்பா சர்க்கார் தன் கட்சிக்கு

— 8-ம் பக்கம் —

கண்ணதாசன்
எழுதும்
**சிரிப்புத்தான் வருகுதையா!**
கண்ணதாசன் விடையளிக்கும்
**வினா-விடைப் பகுதி**
ஆகிய இரண்டும்
"தென்றல்" 20-6-59-ம் தேதி இதழில்
தொடங்குகின்றன.

# கவரி வீசிய காவலன்!

கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமான் நெடுமானஞ்சியை களத்திலே வீழ்த்தி, அவர் ஆண்டு வந்த தகடூரை வெற்றிகண்டு, சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை எனப்பெயர் பெற்ற இவ்வரசன் மிகவும் கொடைத் தன்மைப் பெற்றவனாகும். இரவலரைக் கண்டால் அவர்கள் முகம் மலருமளவிற்குப் பொருள் தந்து பூரிக்கும் புரவலன்! மேலும் தமிழ்ப் புலவர்களைக் கண்டாலோ, அவர்தளது வறுமையைப் போக்கவேண்டும் என்ற தணியாத ஆசை அவன் உள்ளத்திலே கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும்!

"புலவர்கள் வறுமை நீங்கி வளமோடு வாழ்ந்திருந்தாலல்லவா தமிழுக்கு உயிர்?" என்ற மூல காரணத்தை அவன் உணர்ந்திருந்ததே அதற்குக் காரணமாகும். உதாரணமாக, தமிழ்ப்புலவர் அரிசில் கிழாரையே அரசராக்கினனென்றால், தமிழைக் காக்கவேண்டும் என்ற அவனுடைய உள்ளத்துடிப்பை நம்மால் அளவிட்டுக் கூறமுடியுமா?

இச்சேர மன்னன் கடைச் சங்க காலத்தில் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தான். பெருஞ்சேரல் இரும்பொறையின் கொடைத் தன்மையைப் பெரிதும் கேள்விப் பட்டிருந்த மோசுகீரனார் என்னும் புலவர், தன்னுடைய வறுமைப் பிணியைப் போக்குவான் வேண்டி இரும்பொறையை நாடிக் கருவூரை நோக்கிப் புறப்பட்டார்.

"மன்னனு மாசறக்
 கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன்
 சிறப்புடையன்-மன்னனுக்குத்
தன்றேச மல்லாற்
 சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாஞ்
 சிறப்பன்றோ!"

கருவூரை அடைந்த மோசுகீரனார், நகரத்தின் மாண்பினைக் கண்டு மகிழ்ந்து, சென்றுகொண்டிருந்தார். வழியிலே ஒரு செழுமையான குளம். அக்குளத்தில் செந்தாமரையும் வெண்தாமரையும் நிரம்பி அதற்கு எழிலூட்டிக்கொண்டிருந்தன. அக்குளத்தருகே வண்ண மலர்ச் சோலை. அங்கே தேனை மாண்டு செல்லப் பாடி வரும் வண்டுகள் ஆடும் மயில்கள்-பாடும் குயில்கள்-அச்சோலைக்குள்ளே ஒரு சுந்தர மாளிகை! இவ்வித எழில் மிகுந்த காட்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டே கொற்றவன் கோட்டையை அடைந்தார் புலவர். அங்கே விற்கொடி வானளாவப் பறந்து தமிழ்ப் புலவருக்கு வரவேற்பு அளித்துக்கொண்டிருந்தது.

புலவனைப் புரவலன் கண்டு எல்லையில்லா இன்பத்துள்ளாழ்ந்தான். புலவரின் வருகையைப் பேரின்பமாகக் கொண்டான். புலவர் மன்னனோடு அறுசுவை உண்டியுண்டார். அரசனது அன்பு இனியதா? அவருடைய உணவு இனியதா? என்று அவரால் அப்போது தீர்மானிக்க முடியவில்லை. தன்னோடு சமமாக அமர்ந்து உணவருந்திய இரும்பொறையின் மாட்சியினை வியந்து எப்படிப் புகழ்வதென்றே புரியாமல் மோசுகீரனார் தவித்தார்.

உணவு முடிந்ததும் சற்று கோட்டையைச் சுற்றிப் பார்க்கலாமென்ற எண்ணம் தோன்றவே, கோட்டையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வந்தார் புலவர். எல்லாம் பார்த்தாகிவிட்டது. இறுதியாக ஓர் இடம் அங்கே அழகான ஒரு மஞ்சத்தைக் கண்டார். நெஞ்சத்தைக் குளிர்விக்கின்ற மலர்கள் தூவி அம்மஞ்சத்தை நிரப்பியிருந்தார்கள்! புலவருக்கோ உண்ட மயக்கம்!

"வெளியிலே வெப்பம் தாங்க முடியவில்லை! ஆனால், இம்மண்டபத்தினுள்ளோ, வெண் நிலவின் குளிர்ச்சியல்லவா குடிகொண்டிருக்கிறது! இந்தத் தனியறை யாருடைய படுக்கையறையாக இருக்கும்? எண்ணை நுரை பொங்கியது போல் மெல்லிய மலரினைத் தூவி, மந்தகாசத்தையல்லவா உண்டாக்கி இருக்கிறார்கள்! இதுவும் இரும்பொறையின் மாட்சி போலும்! இம்மஞ்சத்தில் படுத்துறங்கினால் என்ன? அரசனோடு சமமாக அமர்ந்து உணவுண்ட நமக்கு, இதன்மீது படுக்கத்தானா தடையிருக்கப் போகிறது?" என்றெல்லாம் யோசித்து ஒரு முடிவிற்கு வந்து, அம்மஞ்சத்தின்மீது ஏறிஅமர்ந்தார்! சிறிது நேரத்திற்கெல்லாம் தூக்கம் அவருக்குத் துணை வந்துவிட்டது!

அப்பக்கமாக வந்த காவலர் இருவர், முரசு கட்டிலில் யாரோ உறங்குவதைக் கண்டு, அலறிப் புடைத்துக்கொண்டு மன்னனிடம் சென்று விபரத்தைக் கூறினர்.

இச்சேதியறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை புலியெனச் சீறினன்! "முரசுக் கட்டிலில் முடங்கிக்கிடக்கும் அம்மூடன் யார்? இறப்புலகேகும் முடிவோடு வந்திருக்கின்றானே அக்கொடியவன்?" என்ற கேள்வியுடன் தோள்கள் துடிக்க-கண்கள்சிவக்க-மீசை படபடக்க - கை வாளின்மேல் பாய-கால்கள் முரசுக்கட்டிலிருக்கும் இடத்தை நோக்கி விரைந்து வந்துக்கொண்டிருந்தன!

முரசுக்கட்டிலை நெருங்கிவிட்டான் மன்னன்! "என்ன நடக்கப்போகிறதோ? படுத்துறங்கும் அந்தப் பஞ்சையின் உயிர் எப்படியெல்லாம் துடிக்கப்போகிறதோ?" என்றெல்லாம் எண்ணி பயந்து நடுநடுங்கிக் கொண்டிருந்தனர் காவலாளிகள்!

சிங்கத்தின் சினத்தோடு வந்த அரசன் "வெற்றி முரசை வைத்து, மணமலர்களால் அலங்கரித்து பீலியணிந்து போற்றுதற்குரிய முரசுக் கட்டிலில் சற்றும் அறிவிலாப் பேதை யார் தூங்குவது?" என்று கேட்டுக் கொண்டே வாளை உருவினன்! என்ன ஆச்சரியம். அங்கே படுத்திருந்தது புலவர் மோசுகீரனார் என்பதை அறிந்ததும் திகைத்துப் போய் வாளை உறையிலிட்டான்! சினம் சிட்டாகப் பறந்தது. இரக்கம் தோன்றியது "என்ன காரியம் செய்யத் துணிந்தேன்? அவருக்கு உண்டியளித்து உபசரித்த நான், உறங்குவதற்கும் இடமளித்தல்லவா இருக்கவேண்டும்? என்ன பிழை செய்தேன்!" என்றெல்லாம் எண்ணி வருந்தி, நீராடி வரும் முரசை வெளி மண்டபத்தில் வைக்கும்படி கட்டளையிட்டுவிட்டு, பக்கத்திலிருந்த கவரியை எடுத்துப் புலவர் பெருமானுக்கு வீச ஆரம்பித்துவிட்டான்!

அன்றலர்ந்த செந்தாமரையைப் போலிருந்த புலவரின் முகத்தை, உற்றுநோக்கியவாறு இருந்தான் இரும்பொறை!

தேனையுண்டு மயக்கமுற்ற வண்டுகளைப் பூவிதழ்கள் மூடிக்கொண்டன போல், புலவரின் கருவிழிகளை இமைகள் மூடிக்கொண்டிருந்தன!

சிறிதுநேரம் சென்றது......

புலவர் திடுக்கிட்டு எழுந்து பார்த்தார்! எதிரே பெருஞ்சேரல் இரும்பொறை கவரியைக் கையில் பிடித்து வீசிக்கொண்டிருந்தான்!

இந்நிலையைக் கண்ட புலவர், எழுந்தார்; அரசனை வணங்கினார்; பின இறுகக் கட்டித் தழுவிக்கொண்டார்!

அரசருக்கு அருகிலிருந்தோர் மோசுகீரனாரைப் பார்த்து, "நீர் கண்ணுறங்கிய கட்டில் வீரமுரசம் விற்றிருக்கும் பொற்கட்டில்! முரசு நீராடுதற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. நீரதில் படுத்துறங்கினீர், அது முரசுக் கட்டில் என்று அறியாத காரணத்தால்!" என்று எடுத்துக் கூறினர்.

இதைக் கேட்டவுடன் புலவர், "ஆ...! என்ன தவறு செய்துவிட்டேன்! நாட்டின் வழக்கமறியாது பெரிய தவறு செய்துவிட்டேனே! மன்னரே! என்னை மன்னிப்பீரா?" என்று கேட்டு வணங்கினார்.

"அப்படி என்ன பிழை செய்துவிட்டீர் மன்னிக்க? பொதுவாக அது குற்றமேயானாலும் விலக்குமுண்டு அதற்கு!" என்றான் மன்னன்.

"விதி விலக்கிருக்கலாம் ஆனால், அது எப்படி எனக்குத் தகுதியாகும்?" என்றார் புலவர்.

"தாங்கள் ஏற்றவர்கள் தான்?" என்று அமைதியோடு கூறினான் அரசன்.

"இல்லை. நான் ஒரு வீரனாக இல்லாததால் என்னை வெட்டாமல் விட்டீர்கள்!" என்று சொன்னார் புலவர்.

"அப்படியில்லை புலவரே அது! இந்த வெற்றி முரசு எங்கள் புகழை வெளியிடுவது. அதைவிடத் தாங்களே எங்கள் புகழை வெளியிடுவதில் சிறப்புடையவரன்றோ!" என்றான் அரசன்.

'என்ன தமிழன்பு! தாங்கள் தமிழ்ப் பற்றுடையவர்களென்பதை, என்னை வாளால் வீசாமலிருந்ததிலிருந்தே அறியலாம்! மேலும் வறுமையைச் செல்வம் வழிபடுவது போலக் கவரி எடுத்து, வீர நெடுந்தோளசைய எனக்கு வீசியதை என்னவென்று சொல்லுவேன், அரசே! எவ்விதமாய்ப் புகழ்வேன்? இவ்வுலகிற் புகழ்ப் பயிரை நட்டவருக்கேயன்றி, மற்றவருக்கு இடமில்லை என்பதனை உணர்ந்து செய்தீரோ?" என ஆச்சரியத்தில் மூழ்கியவராய்க் கேட்டார் புலவர்.

"கவிஞரே! புகழ்ச்சி வேண்டாம். தங்களை வாளெடுத்து வீசியிருப்பேனானால், தமிழையே நான் கொன்றவனாவேன்! பிறகு அந்த வாளை எடுத்து எந்த உறையிலிடுவேன்? தமிழுறையன்றோ வெற்றி வாளுக்கு இருப்பிடம்! தமிழாலன்றோ என் வெற்றி வளர்கிறது; காக்கப்படுகிறது! எனவே, தங்களைக் கொன்று என் வாளை கறைப் படுத்தமாட்டேன்! நான் தங்களுக்கு கவரி எடுத்து வீசும்பொழுது தங்களை மோசுகீரனாராகக் கருதவில்லை! சங்கத் தமிழ்த் தாய் படுத்துறங்குவதாகவே கருதினேன்! ஆகவேதான் தங்களுக்கு வெண் சாமரம் எடுத்து வீசினேனேயல்லாது, எந்த இடத்திலோ எப்போதோ கிடைக்கப் போகும் புகழுக்காக அல்ல! தாய்க்கு பணி செய்தல் சேய்க்கு கடமையன்றோ?" என விளக்கினன் வேந்தன்.

"அரசே! தங்கள் பெருந்தன்மையை என்னென்பேன்! இந்த வறியவன்பால் என்ன பொருள் காட்டுகிறீர்கள்!" என்று தன் உள்ளத்து உணர்ச்சிதனைக் கொட்டிப் பேசினார் புலவர்.

"தமிழ்க் காக்கும் தலைவரே! இனி எப்போதும் தங்களை வறியவரென்று கூறாதீர்! தமிழ்ப் புலவரை வறியவரென்பது - தமிழையே வறியது என்பதாய் முடியும்! தமிழ்நாட்டின் செல்வமெல்லாம் தமிழின் செல்வமே! எனவே இனியும் தங்களைத் தாங்கள் வறியவரென்று சொல்லாதீர்!" என்று வாஞ்சையோடு கேட்டுக்கொண்டான் மன்னன்.

"மன்னா! இதுவரைப்பட்ட துன்பங்கள் என்னை அவ்வாறு கூறும்படி இழுத்துவிட்டன; இனி கூறமாட்டேன்!" என்றார் புலவர்.

மன்னனும் மகிழ்ச்சி கொண்டு, ஏராளமான பொன்னும், பொருளையும் எடுத்து வாரி வழங்கினான்! புரவலன் கொடுத்தப் பரிசிலைப் புலவரும் பெற்று மகிழ்ச்சியோடு ஊர் போய்ச் சேர்ந்தார்!

★

முடிதாங்கிப் பாராளும் மன்னனுனும் தமிழுக்குத் தலைவணங்கி நின்ற இச்சித்திரத்தை, தமிழரின் அழியாத சொத்தாய் விளங்கி நிற்கும் புறநானூறு என்னும் சங்க இலக்கியம் நமக்கெல்லாம் எடுத்துக் காட்டிக்கொண்டிருக்கிறது! இதோ அது :—

"மாசற விசித்த
 வார்புஉறு வள்பின்
மைபடு மருங்குல்
 பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி
 ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு
 பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை
 உருகெழு முரசம்
மண்ணி வாரா
 அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன
 மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய
 என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின்
 வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும்நற்
 றமிழ்முழுது அறிதல்
அதனொடும் அமையாது
 அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள்
 ஓச்சித் தண்ணென
வீசி யோயே
 வியலிடம் கமழ
இவண்இசை யுடையோர்க்கு
 அல்லது அவணது
உயர்நிலை உலகத்து
 உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட
 மாறு கொல்
வலம்படு குரிசில்நீ
 ஈங்குஇது செயலே."

-தங்கவியல் லோகிதாசன்.

# "ரப்பர்" பொம்மனின் வாரிசுகள்

மூத்து மொழிகள் சிந்தும் வித்தகர் களைப் போன கிழமை சந்தித்தோம். சிலம்பை முழக்கிக் கிழித்தனர். கட்ட பொம்மனைத் தூக்கிக் கூத்தாடினர்; பற்றுக் குறைக்கு எவர் எவரையோ பலியாக்கினர்; தம்மை உயர்ந்தோர் எனத் தாமே தம்பட்டம் அடித்துக் கொண்டனர்; இத்துணைக்கும் மேலாகத் தாம்தான் "தமிழ் அறிஞர் கள்" எனப் பெருமை பேசுவதை இன்னும் நிறுத்தவில்லை! அகரத் துக்கு அடுத்த எழுத்து என்ன என் பதைக்கூட அறியாத இந்தச் சுழல் நாவுக்காரர்கள் எதை எதையோ பேசுகின்றனர். எப்படி நாம் இவர் களை நம்புவது?

காலஞ்சென்ற ஒரு நகைச் சுவை மன்னர் சொல்வார், மூர்மார்க் கெட் வியாபாரிகளைப்பற்றி. அவர் கள் சாமானின் தரத்தையோ, நிலையையோ கணக்கிடமாட்டார் களாம். "இதெல்லாம் ஓரணா! அதெல்லாம் ஒன்றரை அணா! எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று இரைவார் களாம். அப்பொருள்கள் விலைதான் குறைவே ஒழிய, நம்பிக்கைக்கு உரியனவல்ல. முறிந்த சீப்பும் கிழிந்த செருப்பும்கூட அங்கு விற்கப் படும். ஏமாந்தோர் ஏமாற்றுவோ ரிடம் அதையும் வாங்கிச் செல்வர். இது ஊர் அறிந்த உண்மை. இந்தப் பணியைச் செய்யக் கிளம்பிய அற்புத வணிகப் புலவர்கள்தான் ம. பொ. சி. கழகக் கூட்டத்தார். எவன் எவன் அழைத்தாலும் சரி—தம் தொண்டை கிழியக் கத்திக்கொண்டு ஓடி வருவர். பல வேலைகளில் அழைக்காத இடங் களுக்கும் அவர் வாலையாட்டிக் கொண்டு செல்வது, கண் கண்ட நிகழ்ச்சி!

அவர்களுக்சென்று சில தனியான வழி முறைகள் இருப்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அவை சமுதாயத்தின் எந்தப் பகுதிக்கும் தீங்கிழைக்காததாய் இருக்க வேண் டும். அதுதான் நம் ஆவல்!

"முடித்தலைவனும் மொட்டையும்" என்று தலைப்பிட்டது தவறும். மயிர் ஆராய்ச்சியில் இறங்கிய "ரோமப் புலவர்" திருவாய்மலர்ந் தருளிய பேச்சு இது! மொழியைத் துளைத்து, விழியைக் குடைந்து, அறி வைப் பிழிந்து எடுத்துத் தரும் திறன் காணீர்! நன்று! நன்று! உம் ஆராய்ச்சி! மூளி என்றதும் காதைத் தொட்டா பார்ப்பது? மொட்டை என்றதும் தலையைத் தடவிப் பார்த்துக்கொண்டதோடு நில்லாது, "ஆகா! என்னை மொட்டை என்றது மொழிக் குற்றம்; பொருள் குற்றம்!" என்று குதிப்பது? "தமிழின் கரை கண்ட" கைரேகைப் பேர் வழியே! சிறப்பானவற்றை விகுதியோடும், இழிவானவற்றை மொட்டையாக வும், அதாவது விகுதியற்றும் சொல் தல் உமக்குத் தெரியாதோ?

அதோ, ஒரு ஊமை!

அதோ, ஒரு நொண்டி!

அதோ, ஒரு செவிடு!

கண்ணப்பனும் குருடும் போனார் கள்!

ஊமையனைக் காட்டுவதற்கு ஊமை என்கிறோம். நொண்டியான மனிதனைச் சுட்டுவதற்கு நொண்டி என்கிறோம் செவிடு+அன்=செவி டன் என்றாகும். என்றாலும் செவிட்டுத்தனம் என்ற இழிவைக் குறிப்பதால் "அன்" விகுதியை விட்டுவிட்டே செவிடு என்கிறோம்! இது நாம் அன்றாடம் காணும் உண்மை! மொட்டை+அள் என்று சேர்த்து மொட்டையள் என்பது உண்டு. ஆனால் இழிவு கருதி மொட்டை என்றே குறிக்கிறோம் ஊமையானவனை ஊமை என்றும் செவிடுள்ளவனைச் செவிடு என் றும் குறித்தல் எப்படித் தப் பில்லையோ அப்படித்தான், மொட்டையனை "மொட்டை" என்று சொல்வதும் தப்பில்லை. இந்த அடிப்படை அறிவுகூட இல்லாத நீர் "ஆகா! ஊகூ!" என ஆர்ப்பரித்துக் கிளம்பியது வேடிக் கையினும் வேடிக்கை! நிகண்டை யும் அகராதியையும் கரைத்துக் குடித்தவரே! சொல், வார்த்தை எல்லாம் புட்டு புட்டு வைத்துப் பொறுக்கித் தின்றவரே! ஏனய்யா உம்மூஞ்சி இத்துணை வண்ணத்தைக் காட்டுகிறது?

ஒற்றுப் போட வேண்டிய இடத் தில் ஒற்றுப் போடக்கூடத் தெரிய வில்லை. "இந்த கண்ணதாசனும்" "தமிழக கூட்டரசுதான்" "கைதட்டி பாராட்டிவிட்டார்களாம்!" என்றெல் லாம் புணர்ச்சி விதிகூடத் தெரியாது எழுதுகின்ற நீர், சொல்லின் பொருள் விளக்கப் புறப்பட்டு விட்டீர்! "கைத்தட்டி" "கைத் தட்டல்" "பொருள்க்குற்றம்" என்றெல்லாம் ஒற்று மிக முடியாத இடத்துக்கும் அதனை மிக வைத்து எழுதும் நீர் பேசு கிறீர் பொருள் குற்றம் எம் எழுத்தில் இருப்பதாக! உம்மையும் ஒருத்தி பெற்றுப் போட்டாளே, வேலையற்றுப் போய்!

பழைய திராவிட இயக்க எதிர்ப்பு காரணமாக திராவிட முன்னேற்றக் கழகம் அழிந்துவிட்டதாக வேறு எழுதுகிறார். எத்துணை எதிர்ப்புக்கள் வந்தாலும் உடையாத எஃகுக் கோட்டை, இவர்கள் வாரியிறைத்த வார்த்தை மணலால் அழிந்துவிட்ட தாம். அப்படிச் செய்யப் போவதாகச் சொல்லி உம் பணப்பையை நீர் நிரப்பிக்கொண்டீரே ஒழிய, கழகம் ஒன்றும் கலைந்து விடவில்லை. அன்று இருந்த கழக உறுப்பினர் எண்ணிக் கை இன்று இருமடங்கு மும்மடங் காகிவிட்டது! அன்றைக்கு இன்று, பல ஆயிரம் கிளைகள் பெருகியிருக் கின்றன. நாடெங்கும் புத்துணர்ச்சி; நல் வரவேற்பு. கழகத்தால்தான் தம் வாழ்வு தழைக்கும் என மக்கள் நம்பி ஆதரவு தருகையிலே இந்த வெறி நாய்களைக் கண்டா நமக்கு அச்சம்? மக்கள் நம்புகின்றனர்; அணைத்துக் கொள்கின்றனர். பின் ஏன் புலி வேடம் போடும் இந்தப் பூனைகளிடம் பயம்? சற்றுகிலும் சிந்திக்க வேண் டாமா, சந்தி சிரிக்கும் தம் வார்த்தைபற்றி! "கல்லடி பட்டாலும் மல்லன் கையால் பட வேண்டும்!" என அது நம்மீது பாய்கிறது. வெறி நாய் வளர்க்கும் கூலித் தளபதி அதை இழுத்துப் பிடிக்காவிட்டால், தளபதியின் கையும் என்னாகுமோ? 'போகிறது! போகிறது!" என்று எத்துணை நாட்களுக்கு வாளாய் இருக்கமுடியும்? இனி முடியாது. "இந்த நாய் கத்துவதால் ஊரார் அமைதியும் கெடுகிறது. திருடனைப் பிடிப்பதற்குத்தான் நாய் தேவை என்பர். இந்த நாயோ திருடனுக்குத் துணை நின்று, நல்லோரைப்பிராண்டு கிறது. இதனை அடிக்க நாளும் கால மும் பார்க்க வேண்டியதில்லை! கண்டவுடன் அடித்துப் போடுங்கள்! இன்றேல் உங்கட்கே அழிவுதான்!" என்று ஊரார் பேசிக்கொள்ளும் காலம் வரத்தான் போகிறது.

அடுத்து, சுதந்திரத்தின் இலக் கணம் புரியாத நீ இந்திய ஆட்சி பற்றியும் வெள்ளையர் ஆட்சிபற்றியும் பேசுகிறாய்! நீ செத்த பாம்பைக் கவ்வும் வீராதி வீரன் என்பது எங்கட்குத் தெரியாதா என்ன?

எப்படியோ, பதவிக்கு ஏமாந்தோ ரெல்லாம் ஒன்றுகூடிப் புதுக்கொடி பிடித்துவிட்டீர்கள். "தி. மு. க. தவறு கிறது; தீது செய்கிறது!" என்று இல்லாதனவும் பொல்லாதனவும் பேசுகிறீர்! தி. மு. கழகத்தின் திட்டங் கள் தீயன என்ற பொய்யைத் திருப்பத் திருப்பக் கூறினால் மக்கள் நம்பிவிடுவர் என்று எண்ணுகின்றீர்! பொய்யை மெய்யாக நம்பிய காலம்—வாடகைவாயர்களின் நாச்சுழற்சியில் மயங்கிய நாட்கள், போய்விட்டன. ம. பொ. சி எனப்படுபவர் பேசுகிறார், சென்னை நகராண்மைக் கழகத்தினர் விதிக்கவிருக்கும் புதிய வரி பற்றி. "அந்தவரியின் நோக்கங்களென்ன? அதை எப்படி நடைமுறைக்குக் கொணர்வர்?" என்பனகூட அறி யாது பேசுகிறார். இப்போது சென்னை யில் பேசிவரும் கூட்டங்களில் எல்லாம் புளுகு மூட்டையை விரித்து வைக்கிறீர்! உண்மையான அர சியல் வாதிக்கு இருக்கவேண்டிய நியாயம் நீதியை மறந்து பேசுகிறீர்! முத்துக் கருத்துக்களைக் கொத்துக் கொத்தாகத் தரும்அற்புதத்தலைவரே! உமக்கு எப்போதும் இந்தப் புளுகு மூட்டைதான் துணையா? பச்சைப் புளுகுகளை ஒன்றன்பின் ஒன்றாய் விரித்து வைக்கும் உமக்கு எத்துணை நாள்தான் கூலி கிடைக்கும்?

அன்றொருநாள் அப்படித்தான் மதுரையில் ஒரு புளுகு மூட்டையை பிரித்தீர். '52 பொதுத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்து உமது வாடகைவாயை மதுரை—திலகர் திடலில் திறந்தீர்! நாற்றம் பொறுக்கமுடியாமல் மக்கள் ஓடினர்; அதனைப் பொறுத்துக்கொண்ட சில எருமைகளிடம் ஒரு புளுகைக் கொட்டினீர். "அய்யகோ, தோழர் களே! நேர்மைக்குப் பாடுபடும் காங் கிரஸ்காரர் ஒருவர் நெஞ்சில் ஒருவன் ஈட்டியைச் செருகிவிட்டான். இன்று மாலை ஐதராபாத்தில் தேர்தல் வேலை யில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ்ஊழியர் ஒருவரை ஒரு கம்யூனிஸ்ட் குத்திக் கொன்றுவிட்டான். கொடுமை! கொடுமை! இந்தக் கம்யூனிஸ்ட் களுக்கா உங்கள் வாக்குகள்?" என்று முழக்கிக் கிழித்தீர்கள். நீரே உம் காதால் வானொலியில் கேட்ட தாகவும் கம்யூனிஸ்ட்கள்தான் அக் கொலையைச் செய்ததாகவும் கூறிக் கிழித்தீர். கூலிப்பட்டாளங்கள் கை தட்டவும் செய்தன. மதுரையில் கம்யூனிஸ்ட் சார்பில் நின்ற தோழர் பி. இராமமூர்த்தி தோற்கப்போகிறார் எனவும் கூறினர். நீர் "மாலை, வானொலியில் கேட்டேன்" என்று பேசிவிட்டு மேலும் பேசிக்கொண்டே சென்றீர். உம் இராமாயணப்பேச்சை நீர் முடிப்பதற்குள் விஷயம் தெரிந்த கம்யூனிஸ்ட் தோழர்கள் எழுப்பிய எதிர்ப்பால் நீர் மன்னிப்புக் கேட்டீர். கம்யூனிஸ்ட்கள்மேல் கெட்ட எண் ணத்தைப் பரப்பவேண்டும் எனக் கோயபல்ஸ்தனம் செய்த உம் வாய் அடுத்த மணி நேரத்திலேயே மன்னிப்புக் கேட்கவேண்டியதா யிற்று. "ஐதராபாத்தில் ஒரு காங் கிரஸ் ஊழியர் கொலை செய்யப் பட்டது உண்மைதான். ஆனால் அந்தக் காங்கிரஸ ஊழியர் கொலை யுண்டது கம்யூனிஸ்ட்களால் அல்ல! வேறு யாரோ சொந்தக் காரணங்களுக்காகக் கொலை செய்து இருக்கின்றனர். என்று அறிய வரு கிறேன். எனவே முன் சொன்னதை வாபஸ் வாங்குகிறேன்!" என மண்டி யிட்டீரே! இரண்டுமணி நேரத்திற் குள்ளாக இறங்கி வந்த உமது தொழிலே புளுகுதான். "அந்நேரத் திற்கு உணர்ச்சியைக் கிளப்ப, ஏதாகிலும் பொய்யும் புளுகும் சொன் னால் போதும்; ஊரார் அறிந்து கேட்டால் மன்னிப்புப் பெற்றுக் கொள்ளலாம்; அல்லது மழுப்பி மறைக்கலாம்!" என்ற மோசடித் தத்துவத்தை வைத்திருக்கும் நீர் பிரயாணிகள் வரி பற்றிப் பேசக் கிளம்பியிருக்கிறீர். வெட்கக்கேடு! வெட்கக்கேடு! என் தமிழ்நாட்டில் ஒருவர் இப்படிப் பொய்யும் புனை சுருட்டும் கூறித்தான் வாழவேண்டு மென்றிருக்கும் நிலை கண்டு வெட்கப் படுகிறேன்! இந்த இழிநிலைக்கு ஒரு தமிழ்மகன் இறங்கி வரவேண்டிய நிலைகண்டு வேதனை கொள்கிறேன். அரசியலில் நியாயமும் நேர்மையும் நீதியும் நிலைக்க வேண்டுமானால், ஒழுங்கும் அமைதியும் காக்கப்பட வேண்டுமானால் வாயைப் பொத்திக் கொண்டு கிடந்திடுக. "வயிறு பசிக் கிறதே! வாயைத் திறந்தால்தானே வாடகை கிடக்கிறது; வயிற்றுப்பசி கொல்கிறது" என்று கூறுவீரானால். இந்த வழியைக் கைக்கொள்ளும்! "ஒரு தமிழன் மானத்தோடு வாழ விரும்புகிறான். தான் வாழ்ந்த கூலிவாழ்க்கையைவிட்டுவிடவிரும்பு கிறான். அவன் புதிய வாழ்க்கை பெறு வதற்கு ஏதாகிலும் உதவுக!" என்று ஒரு அறிவிப்புப் பலகை எழுதிப் போட்டுவிட்டு அமைதியாய் உட் காரும் தமிழகம்எப்படியாகிலும்—ஒன் றிரண்டாய்த் தந்தாகிலும் உம்மைக் காப்பாற்றும். இந்த உண்மையை அறிந்து நீர் உயிர் பெறுவிட்டால்... வாயையும் மானத்தையும் வாட கைக்கு விட்டு, வாய்மையும் நேர் மையும் இழந்து, நடக்கும் பிணமான, ஒரு மனிதனை நம் காலத்தில் சந்தித் தோமே என நாங்கள் வருந்தித்தான் சாகவேண்டி வரும்!

மா. பாண்டியன்

— 5 ம் பக்கத் தொடர்ச்சி —

இலஞ்சம்கொடுக்கும்கொள்ளைக்கார முதலாளியின் ஊழல்களையெல்லாம் வெளிப்படுத்திவிட்டால் சிதைந்து வரும் 'தன் கட்சிக்கு மக்கள் பலம் போனாலுங்கூட பரவாயில்லை; பண பலம் போய்விடுமே" என்று அஞ்சி நடுங்கி அந்த அறிக்கையை முதலாளிக்கு மட்டும் சமர்ப்பித்தது. தொழிற்சங்கங்கள் முழு அறிக்கையையும் பொதுமக்களுக்குத் தர வேண்டுமெனக் கேட்டனர். ஆனால் மதிமந்திரி மறுத்துவிட்டார். மதிமந்திரி மறுக்கவும் காரணம் இருக்கிறது. சென்ற பொதுத்தேர்தலில் காங்கிரசுக் கட்சி வாக்காளர்களுக்குப்பணம் கொடுத்ததை மக்களனைவரும் அறிவார்கள் அந்தப் பணம் எங்கிருந்து வந்தது தெரியுமா? பெரும் பெரும் ஆலை முதலாளிகள் அள்ளிக்கொடுக்கும் வெள்ளிப்பணங்களே. மத்திய சர்க்கார் வெளியிட்ட கம்பெனி புதிய சட்டத்தில், காங்கிரசு சர்க்கார், பெரும் முதலாளிகளிடமிருந்து தங்கள் கட்சிக்கு இலஞ்சம் வாங்குவதைச் சட்டபூர்வமாகவே செய்யவேண்டுமென்று கருதி, முதலாளி இஷ்டப்பட்டால் எந்தஅரசியல்கட்சிக்கும் கணிசமாகப் பணஉதவி செய்யலாம் என்று சட்டம் இயற்றியது. அந்த சட்டத்தின் மூலம் மதுரை மில்லிடமிருந்து சுமார் 75,000 ரூபாய் வாங்கியது. அது தவிர மதுரை மில்லை நிர்வகிக்கும் ஹார்வி கம்பெனியும் மதுரை மில்லின் சகோதர கம்பெனியான பாண்டியன் இன்ஷ்யூரன்ஸும் சுமார் 1 இலட்சம் ரூபாய் கொடுத்திருப்பதாக அறிகிறோம். சட்டத்தில் எந்த அரசியல் கட்சிக்கும் கொடுக்கலாம் என்று இருந்தபோதிலும்கூட எந்த முட்டாள் முதலாளியும் ஆளுங்கட்சிக்குத் தவிர நன்கொடை என்ற பெயரில் இந்த இலஞ்சத்தைத் தர ஒப்பமாட்டான். இது காங்கிரசுக்காரர்களுக்குத் தெரியும். இப்பேர்ப்பட்ட இலஞ்சம் வாங்கிய காரணத்தால் – இன்னும் வரும் தேர்தல்களுக்குப்பணம்வாங்க வேண்டிய காரணத்தால் சர்க்கார் முதலாளிகளிடம் கண்டிப்பாக நடந்துகொள்ளமுடியவில்லை. அதனால்தான் கதர்ஜிப்பா சர்க்கார் வெள்ளை முதலாளிகளின் பூட்சைத் துடைப்பவர்களாக இருந்துகொண்டு தொழிலாளிகளின் நியாயமான கோரிக்கைகளை அடக்கி ஒடுக்கப் பார்க்கிறார்கள். இந்த இடத்திலே அமெரிக்க அம்பாஸிடராகவும் முன்பு பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதியாயும் இருந்த சக்ளா அவர்கள் சட்டத்திற்குட்பட்டு அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை கொடுப்பதாவது சிறுகுழந்தையாயிருக்கும் ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டு முதலாளித்துவக் கொடுங்கோன்மைக்கு வழிகோலுவதாகும் என்று கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**பழிவாங்குவதற்கா?**

அடுத்தபடியாக, காங்கிரஸ் சர்க்கார் மதுரையில் நகர சபைத் தேர்தலில் பெருவாரியாகத் தோல்வியுற்று, கூட்டணி வெற்றி கொண்டதால் தொழிலாளர்பால் வெறுப்புக் கொண்டு அவர்களைக் கூட்டணியிலிருந்து பிரித்து, தம்பால் இழுக்கச் செய்யும் சூழ்ச்சியாக இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்து பழிவாங்க நினைக்கிறார்கள். "நகர சபைத் தேர்தல்களில்தான் வெற்றி பெற்றீர்களே தவிரஉங்கள் வாழ்வையேஎங்களால் குலைக்கமுடியும்" என்று, பசியால் துடிக்கும் தொழிலாளிகளை ஏளனம் செய்கிறார்கள். காங்கிரஸ் எம். எல். ஏக்களை ஒன்று கூட்டி, சமரசம் செய்து வைப்பதாகச் செய்யும் கண்துடைப்பு வேலை தொழிலாளர்களை காங்கிரசுபால் கவரச் செய்யும் சூழ்ச்சியல்லாது தொழிலாளர்பால் ஏற்பட்ட இனஉணர்ச்சியினால் அல்ல.

**கதவடைப்பே!**

முதலாளிகள் இது கதவடைப்பு அல்ல என்று கதறுகிறார்கள். சர்க்கார் அதற்குத் தாளம் போடுகிறார்கள். முதலாளித்துவ சங்கங்கள் ஜால்ரா அடிக்கின்றன. ஆனால் இது உண்மையிலேயே கதவடைப்புத்தான். ஏனென்றால் வேலை நிலையில் முதலாளிகள் மாறுதல் ஏற்படுத்திய காரணத்தால்தான் தொழிலாளர் சட்டப்படி அறிக்கைவிட்டு வேலை நிறுத்தம் செய்தார்களே தவிர வேலை நிலை மாறுதல் இல்லாமல் இருந்தால் எப்பொழுதும்போல் வேலைக்குச் செல்லுவார்கள். அதனால் சர்க்கார் உடனடியாக மதுரை ஆலையை நிர்வாகிகள் கதவடைப்பு செய்துவிட்டார்களென்று கூறி, வெள்ளைக்கார அயோக்கியர்களைத் குறிப்பிட்ட நாளுக்குள் ஆலையைத்திறக்காவிடில் கைதுசெய்து ஆலையை திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். **1938 ஆம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் இராஜாஜி நிட்டவட்டமாக எடுத்த நடவடிக்கைகளை நினைவுறுத்த விரும்புகிறேம்.**

**ஸ்டோர் பாஸ் கிடையாது!**

சென்ற மாதம் கதவடைப்புச் செய்யப்பட்டதால் தொழிலாளிகள் பட்டினியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்த மாதம் கோவாப்ரேட்டிவ் ஸ்டோர்சில் கடனுக்காக முன்னதாக சாமான் கொடுக்கும் பழக்கத்தை நிறுத்திவிட்டால் பசியால் துடி துடிக்கும் தொழிலாளிகள் வேலைக்கு ஓடி வந்துவிடுவார்கள் என்று சூழ்ச்சி செய்து வெள்ளைக்கார அதிகாரிகள் தொழிலாளிகளுக்கு ஸ்டோர் பாஸ் கொடுக்க மறுத்துவிட்டனர். ஆனால் பலருடைய வற்புறுத்தலுக்கிணங்க இந்த மாதம்மட்டும் சாமான் வாங்குவதற்கு பாஸ் கொடுத்திருக்கிறார்கள். இதுகூட, கலெக்டரின் மிகுந்த வற்புறுத்தலுக்குப் பின்னரே கொடுக்க ஒப்புக்கொண்டதாக அறிகிறோம். இப்படியாகத் தொழிலாளிகள் வயிறறிலடித்து, தொழிலாளிகளின் ஒற்றுமையை உருக்குலைத்து, முதலாளியின் கனவான வேலைப் பளுவைத் தொழிலாளிகள் மீது சுமத்தி ஆலையை ஓட்ட முயல்கிறார்கள். இத்தகு கொடுமைகளை கையாண்டும் அதற்கு சர்க்கார் ஆதரவு தருவதாலும் இன்னும் எந்தெந்த முறையில் தொழிலாளிகளுக்குத் தொல்லை கொடுத்துத் தொழிலாளிகளின் ஒற்றுமையை குலைக்கப் பார்ப்பார்களோ தெரியவில்லை.

**துரோகியர்!**

தொழிலாளர்களை காட்டிக்கொடுக்க இராமன் அய்யரும், அவர்களை அடிமைப்படுத்த கிருஷ்ணமூர்த்தி அய்யரும் மதுரை மில்லில் ஆயிரக்கணக்காகத் கைக்கூலி பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அமீர்சந்த் என்ற பாப்பான் அன்று இந்தியாவைக் காட்டிக் கொடுத்தான். இன்று மேலதிகாரிகளாக வீற்றிருக்கும் ராகாவாச்சாரியார், சிவசாப்ப அய்யர், பார்த்தசாரதி அய்யங்கார், பி. யூ. வெங்கடேச அய்யர், சுந்தரமய்யர், வீரராகவ அய்யர், சுப்பையர், கோபால அய்யர், சகாராம் ராவ் முதலியோர் நம் நாட்டுப் பொருள்களை–நம் நாட்டுச் செல்வத்தை வேற்று நாட்டிற்கு அனுப்பவும், நம் நாட்டை சுடுகாடாக்கவும், தொழிலாளிகளின் இரத்தத்தை ஊறிஞ்சவும், வெள்ளைக்கார அதிகாரிகளின் பாதம் தாங்கி வருகிறார்கள்.

**இவர் உணர்வாரா?**

ஒட்டைக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்போல, அன்று ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக இருந்து இன்று காங்கிரசாரை கண்காட்டிப் படுக்கை அறைக்கழைக்கும் மோகினியாகப் பலர் திரிகின்றனர். சர். முத்தையா செட்டியார் தொழிலாளர்களை நசுக்கி – இரத்தத்தை ஊறிஞ்சி, கொள்ளை இலாபம் அடிக்கத் திட்டமிட்டு, வெள்ளைக்காரனின் பாதந்தாங்கியாக, வெள்ளைக்காரன் சொல்லும் காரியங்களை மந்திரிகளுக்கு எடுத்துக் கூறுகின்றனர். தொழிலாளர்களை மிதித்து வெள்ளைக்காரர்களை வாழ்விக்க, கடிதம் கொண்டோடும் பையனாக விளங்குகிறார். தோல் இருக்கச் சுளை முழுங்குவதுபோல சேர்மன் என்ற பதவியை அவர் தலையில் தூக்கி வைத்துத் தங்களுக்கு வேண்டியகாரியங்களைச் செய்யும் எடுபிடியாக முத்தையா செட்டியாரை வைத்துக்கொள்கிறார்கள்.

**வேண்டுகோள்!**

இந்தச் சூழ்நிலையில் தொழிற் சங்கங்களுக்கு ஓர் விண்ணப்பம். நேர்மைக்காகப் போரிடும் நீங்கள் இனி, காலைப் பின் வைத்தால் தொழிலாளர்களை காட்டிக் கொடுத்தவர்களாவீர்கள் என்ற உறுதியாடு முதலாளிகள் தரும் இலஞ்சத்திற்கோ, கொஞ்சும் பேச்சிற்கோ இடங் கொடுக்காமல் சர்க்காரும்–முதலாளியும் நம்மை எதிர்த்து நின்றாலும் மன உறுதியுடன் நின்று போராடி வெற்றியே பெறவேண்டும்.

தொழிலாளத் தோழர்களுக்கு ஓர் விண்ணப்பம். சென்ற தேர்தலிலே கூட்டணிக்கு ஓட் அளித்தீர்கள். அதற்குப் பழிக்குப் பழி வாங்கும் படலமாக முதலாளியுடன் சேர்ந்து உங்களை அழிக்கப் பார்க்கிறது. காங்கிரஸ் ஆட்சி. இனி உங்களுக்கு ஸ்டோர் பாஸ்கூடக் கொடுக்காது. பட்டினி போடும். நீங்கள் பசியால் துடிதுடித்து முதலாளியின் காலடியில் விழுவீர்களென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. பசியால் உந்தப்பெற்று முதலாளியின் காலடியில் சரணாகதி அடைந்தால் – அன்றே உங்கள் உரிமைகள் அனைத்தும் பறிக்கப்படும். இன்னும் அதிகப்படியான வேலைப் பளு சுமத்தப்பெற்று உங்கள் முதுகெலும்பு ஒடிக்கப்படும் முதலாளியின் அயோக்கியத்தனமான பண பலத்திற்கு நீங்கள் மண்டியிட்டால் அதிக வேலைப் பளுவால் நீங்கள் சீக்கிரமாகச் சுடுகாட்டிற்கு அனுப்பப்படுவீர்கள்.

**அரசியல் இயக்கத்தோழரே!**

அந்தி தாண்டமாடுகிறது! உங்கள் துணை என்ன? பணி என்ன?

**பொதுமக்களே!**


உங்கள் மானங்காக்கும் நூலைத் தந்தனர். இவர்களைக் கொத்திக் கிழிக்கிறது முதலாளித்துவம் உங்கள் பணி என்ன? பங்கென்ன?

**ஆணவமே! நீ அழிவாய்!**

வெள்ளை முதலாளிகளுக்கு ஓர் எச்சரிக்கை? துரோகிகளைக் கொண்டு தியாகிகளைச் சாய்த்தீர். ஆனால் உங்கள் சூழ்ச்சிகளைப் புரிந்துகொண்ட தொழிலாளிகளின் ஐக்கியம் இனிப் பிளவுபடாது. சுதந்திரம் கொடுத்துவிட்டோம் என்று சொல்லியும்கூட எந்த அளவிலே வெள்ளையர்களாகிய நீங்கள் பென்னி மில்ஸ் என்றும், ஸ்பென்சர் என்றும், ஹிக்கின்பாதம்ஸ் என்றும், பல்வேறு ஆலைகளையும், தேயிலைத் தோட்டங்களையும்கைப்பற்றிக்கள்ளத்தனமாக எங்கள் பொருள்களை சூறையாடிச் செல்லுகிறீர்கள் என்பதை அறிவோம். என்றுமே காலம் இப்படி இருக்காது. உனது மதுரை மில் சரித்திரத்திலே இல்லாத அளவு, மதுரை மில் தொழிலாளர் 100 க்கு 100 பேர் வேலை நிறுத்தம் செய்தது இதுதான் முதல்தடவை என்பதை இன்னும் நீ உணரவில்லையா. நீ பணம்கொட்டிக்கொடுத்து முதுகிலே தட்டிக்கொடுத்த கைக்கூலிகளும் உன் பக்கம் நியாயம் இல்லை என்பதை உணர்ந்துவிட்டார்கள் அல்லவா! பிரித்தாளும் சூழ்ச்சியால் இன்னும் உன்னால் சூதுச்சரித்திரம் வரையமுடியாது. இதுவே இறுதி எச்சரிக்கை! ★

**அடுத்த இதழில்...**

முந்திரா வழக்குப்பற்றிய முழு விவரம் தரப்படுகிறது.




## நூலைப் பற்றி

**அறிஞர் அண்ணா:**

'தணலில் தங்கம்' ஒரு குடும்பக் கதை. குடும்பத்திலே ஏற்பட்டுவிடும் 'கேடுபாடுகள்' அதனால் வந்துறும் 'அவதிகள்' இவைகளை எதிர்த்து நின்று பெறும் இறுதி வெற்றிகள் என்பவைகளை எடுத்துக் காட்டுகிறது. மா. கி. தசரதன்...நற்கருத்துக்களை 'தணலில் தங்கம்' என்னும் இவ்வேட்டிலே காட்டி, நம்மை மகிழ்வுறச் செய்கிறார்.

வெளியீடு :
**வெண்ணிலா வெளியீடு,**
சி. காஞ்சிபுரம்.

விற்பனை உரிமை :
**"தென்றல்", சென்னை-6.**
தனிப்பிரதி விலை ரூ. 1-50.
தபால் செலவுடன் ரூ 1-60. விற்பனையாளருக்குக் கழிவு 20%.
தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

# பஞ்சம் சதடா!

இரண்டு கைகளிலும் இரண்டு லாடுகளைப் பிடித்தபடிக் குதித்துக் கொண்டே வெளியே ஓடிய துரை 'வீல்' என்று அலறினன். முதலில் மாணிக்கம் ஓடி வர, பின்னல் அவனைத் துரத்திக்கொண்டே வந்த துரை "அண்ணன் என் லட்டை ஓடச்சுட்டான் அப்பா!" என்றான் அழு குரலில். "ஏய் மாணிக்கம், அவனுடன் என்னடா வம்பு? உள்ளே பேய் அம்மாவிடம் வாங்கிக் கொள்வதற்குள் என்ன அவசரம்?" என்று பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பெரிய மகனை அன்பாகக் கடிந்து கொண்டார் கந்தசாமி. உள்ளே ஓடிய மாணிக்கம் "அம்மா எனக்கு லட்டு!" என்று கத்தினன். அவள் அவனுடைய கையில் ஒரு லட்டை வைத்தாள். "எனக்கு மட்டும் ஒண்ணுதானு?" ஆத்திரத்துடன் கூறிக்கொண்டே கையிலிருந்தப் புத்தகப் பையை வீசி யெறிந்தான் மாணிக்கம். "படார்!" சுக்குச் சுக்காக நொறுங்கியது சிலேட்டு!

திடுக்கிட்டுக் கண் விழித்த கந்தசாமிக்கு நொடியில் விஷயம் விளங்கி விட்டது. நிகழ்ந்தது பழைய சம்பவங்கள் அடங்கிய கனவு; நொறுங்கியது தனது மண்சட்டி. தலைக்கு அருகிலிருந்த சட்டி தூக்கத்தில் கை தவறிப் பட்டுக் கீழே விழுந்து சிதறிக்கிடந்தது. அவனது வாழ்வும் அவ்வாறுதான் சீர்குலைந்து போய் விட்டது!

மூன்று ஆண்டுகட்கு முன்னல் 'கரூர் கந்தசாமி' என்றால் சேலத்தில் எல்லோருக்கும் தெரியும். மாருத சாயம், நயமான நூல், நாணயம் ஆகியவற்றால் வெளியூர் வியாபாரிகளிடமிருந்தும், பெரிய மனிதர்கள் பலரிடமிருந்து அவர்களது சொந்த உபயோகத்திற்காகவும் புடவை வேஷ்டிகளுக்கான 'ஆர்டர்'கள் எப்பொழுதும் அவரிடம் வந்து கொண்டே இருக்கும்.

வாழ்க்கைச் செலவிற்கு மிகுந்த அவரது வருமானம் மற்றவர்களின் வாழ்விற்கும் பயன்பட்டது. பசியும் பட்டினியுமாக வந்த பலர் அவரிட்ட அன்னத்தைப் புசித்து அவரை வாயார வாழ்த்திச் சென்றனர். உள்ளூர் கோயில்களில் ஏதாவது திருவிழா என்றால் முதல் உபயம் முதலியாருடையதாகத்தான் இருக்கும். பொதுக்காரியத்திற்கான வசூல் என்றால் முதலில் கந்தசாமி முதலியாரைத்தான் நாடிவருவார்கள்.

வள்ளுவரின் வழிவந்த தொழில் என்றாலும் அதிலும் ஒரு மாற்றம் தோன்றியது. தொழிலுக்குத் தேவையான நூல் கிடைக்கவில்லை. அதை நம்பி வாழ்ந்த பலரின் வாழ்வும் பஞ்சாகப் பறந்துவிட்டது. உழைக்கும் திறனும் உள்ளமும் இருந்துங்கூட அவர்கள் வாழத் தகுதியற்றவர்களாக ஆகிவிட்டனர். ஊரைவிட்டு "யாதும் ஊரே, யாவரும் கேளீர்!" என்று தனித் தமிழர்களாகப் புறப்பட்டுவிட்ட குடும்பங்களில் கந்தசாமியின் குடும்பமும் ஒன்று.

தன்னை நம்பி வாழ்வைத் தன்னிடம் ஒப்படைத்த மனைவி, நம்பியிருந்த இரண்டு குழந்தைகள் இவர்களை அழைத்துக்கொண்டு அவனும் புறப்பட்டுவிட்டான். ஆனால் எந்த இடத்தைக் குறித்து என்பது அவனுக்கே தெரியாது. புயலிலே சிக்கிய படகு போகுமிடத்தை அறிந்தா போகிறது?

அவன் அவர்களோடு ஊர் ஊராகத் திரிந்தான். என்றாலும் ஒருவேளையாவது வயிறார அவன் உண்டதில்லை. முன்பு எத்தனையோ அன்னதானங்கள் நடத்தியவன் இப்போது தனது பசிக்கு 'அன்னம்...தாயே!' என்று கையேந்தி ஊர்ந்தான். திருவிழாக் கூட்டங்களில் இரப்போரைத் தேடிச் சென்று காசு வழங்கிய கால்கள் தற்போது அவற்றிடையில் தனக்கு இரங்குபவரைத் தேடி வளைய வளைய வந்தன. கேட்டும் கேட்காமலும் கொடுத்துக் கொடுத்துச் சளைத்த கைகள் நீண்டு நீண்டு நலிந்தன. விழாக் காட்சிகளைக் கண்டுக் களித்த கண்கள் காலணா தரும் கனவான்களைத் துருவித் துருவிச் சோர்ந்தன.

துன்பம் தன் அளவில் மட்டுமிருந்தால் எதையும் அவன் சகித்துக் கொண்டிருப்பான். ஆனால் மனைவியும் மக்களும் படும் கொடுந்துன்பத்தைக் காணத்தான் அவனால் பொறுக்க முடியவில்லை. வாட்டும் வறுமையில் தனித்து வாழ்ந்திடத் துணிந்திருப்பான்; ஆனால் கொட்டும் கண்ணீருடன் மனைவி அருகிலிருக்க அவன் மனம் துணியவில்லை. நெய் சொட்டும் உணவைப் பெற மறுத்து 'வேண்டாம்! வேண்டாம்!' என்று குழந்தைகள் ஓட, அவர்களை வேண்டிக் 'கொஞ்சம்! கொஞ்சம்!' என்று கொஞ்சியும் கெஞ்சியும் ஊட்டியவன் அவர்கள் 'கஞ்சி! கஞ்சி!' என்று கதறும் காட்சியை எத்தனை நாட்களுக்குச் சகிக்கமுடியும்?

கட்டிய ஆடை கந்தலாகியும் மாற்றிக்கொள்ள மற்றோர் கந்தையுமின்றி அவர்கள் அவதிப்படுவதைக் கண்டு அவன் தவித்தான். நூற்றுக் கணக்கில் வேஷ்டிகளையும் புடவைகளையும் நெய்து எவ்வளவோ பேர்களுடைய மானத்தைக் காத்த அவனால் தனது மானத்தைக்காத்துக் கொள்ள இயலவில்லை. மற்றவர்களின் எழிலைக் காட்டி மகிழச் செய்யும் கண்ணாடி தன் உருவைத் தன்னிடத்திலேயே கண்டுகளிக்க இயல்வதில்லை! இரவிலே இருள் செறிந்துள்ள இடத்தில் மனைவி தனது கந்தையினால் குழந்தைகளைப் போர்த்துவிட்டு, தான் இருளாடை கொண்டு உடல் மறைத்து ஒளிந்து உறங்குவது அவனது உள்ளத்தை அறுத்தெடுத்தது அதற்குச் சாணை தீட்டின, அவ்வழியாகச் செல்லுவோர் கூறும் கிண்டல் சொற்களும் ஆபாச வார்த்தைகளும்! ஒரு நாளிரவு அவன் நளனையும் மிஞ்சிவிட்டான்! கட்டிய மனைவியையும் பெற்ற பிள்ளைகளையும் விட்டு ஓடிவிட்டான். இருந்தும் அவனது சாண் வயிறு நிறைந்த நாளே இல்லை. இன்றுவரை அவனுக்கு ஆதாரமாக இருந்தது அந்த மண் சட்டிதான்! இப்போது அதுவும் நொறுங்கிவிட்டது! அவனது கண்கள் நீரைச் சொரிந்தன.

சிதறிய சிந்தையை ஒன்றுசேர்த்து அவ்விடத்தை விட்டுத் தெருவை நோக்கி நகர்ந்தான் கந்தசாமி. கோடி வீட்டில் மணி ஒலிக்கும் ஓசை கேட்டது. அது இசைத்த தன்மையிலிருந்து இறை வழிபாடு நடப்பதை அவனது அனுபவ மிகுந்த செவிகள் உடனே உணர்ந்து கொண்டன. பெருத்த நம்பிக்கையோடு அவனது கண்டம் 'அன்னந் தாயே' என்று குரல் எழுப்பிற்று. கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள் ஒரு பெண். கையிலிருந்த சோற்றிலிருந்து நெய்யின் மணம் கமழ்ந்தது. நாவில் நீர் சுரக்கத் தன் கரங்களை நீட்டினன் கந்தசாமி. வாசலில் நின்றவாறே 'கா! கா!' என்று கூவிச் சோற்றை ஓட்டின் மேல் வீசி யெறிந்துவிட்டுப் 'படா' ரென்று கதவை மூடிக்கொண்டுப் போய்விட்டாள் அவள்; அவள் பசி அவளுக்கு! பறந்து வந்த காக்கைகள் பரக்கப் பரக்கப் பருக்கையைப் பொறுக்குவதைப் பார்த்துக் கொண்டே நின்றான் அவன். இந்த உலகத்தின்மீது ஒரே வெறுப்பாக வந்தது அவனுக்கு. இந்த வாழ்வு வாழ்வதைவிட உயிரைப் போக்கிக் கொண்டால்தான் என்ன?

உயிரை விடுவதா? இதற்காகவா இதை இவ்வளவு பாடுபட்டுப் பாது காத்தோம்? வாழ்வதற்குப் பணந் தானே தேவை? அதை எப்படியாவது அடைந்துவிட்டால்... ..அவன் சிந்தித்தான் இல்லை வறுமை அவனைச் சிந்திக்க வைத்தது. அதற்குத்தான் அந்த ஆற்றல் உண்டுபோலும்!

இறைவனின் படைப்பின் பயனை எல்லோருமல்லவா நுகரவேண்டும்? இயற்கைச் செல்வங்களான தங்கமும் வெள்ளியும் அவற்றைத் தாங்கியுள்ள பரந்த நிலமும் மக்கள் யாவருக்கும் சொந்தமல்லவா? ஆனால் அவற்றை ஏன் ஒரு சிலர் மட்டும் தங்களின் உரிமை என்று முடக்கவேண்டும்? இது அவர்களது சுயநலத்தின் விளைவுதானே! சுயநலத்தில் நாட்டம் கொண்டிருப்பதில் தவறில்லை. ஆனால் அது மற்றவர்களின் நலனிற்கு ஊறு விளையாத முறையில் அல்லவா இருக்கவேண்டும்! தங்களின் உயிரைப் பணயமாக வைத்துப் பாதாளத்தில் பதுங்கிக் கிடக்கும் தங்கத்தையும் வெள்ளியையும் வெளிக்கொணரும் முயற்சியில் அந்தப் பணயத்தை இழந்தவர்கள் எத்தனைபேர்! துருவி எடுத்த பொருளுக்கு எழிலளித்து உலகில் உலவவிடும் தொழிலாளிகளின் உழைப்பு எவ்வளவு! அவை மனித இனத்திற்கே உடைமை ஆக வேண்டியிருக்க ஒரு சிலர் வஞ்சனையால் அவற்றைப் பதுக்கி வைத்துக் கொண்டு தங்களுக்கே சொந்தம் என்று தனி உரிமை கொண்டாடினால் அது நியாயமான செயலா? அப்படியானால் அவற்றை பூமியிலிருந்து வெட்டி எடுக்க மக்கள் பலர் புரிந்த தியாகத்திற்குத்தான் பலன் என்ன? பதுக்கிவைப்பவர்கள் பயனுறலாம். திருடனுக்குத் திருட உதவிபுரிவது தியாகமா? தியாகத்திற்குப் பயனை அதைச் செய்பவர்கள் தங்களுக்கு எதிர்பார்க்கக்கூடாது தான். ஆனால் அதனால் பிறருக்குப் பயன் விளைய வேண்டும். தனக்கோ அன்றி மற்றவருக்கோ எவ்விதத்தும் எள்ளளவும் பயனில்லாமல் புரியும் தியாகம் தற்கொலைக்கு ஒப்பானதல்லவா? தற்கொலைக்கா தியாகம் என்று பெயர்?

டண்! கை நெற்றியைத் தட்ட எதிரில் நோக்கினன் கந்தசாமி. அவனுடன் மோதிய மின்சாரக் கம்பம் உயர்ந்து நின்றுகொண்டிருந்தது. பிறகுதான் சுற்றிலுமிருந்த ஒவ்வொரு பொருளும் அவனது கண்களுக்குப் புலப்பட ஆரம்பித்தன. அவனது சிந்தனையில் ஓடிய கருத்துக்களை நினைக்கவும் அவனுக்கே வெட்கமாக இருந்தது. தன்னிடத்தில் பொருள் இருந்தபொழுது இந்த எண்ணங்கள் எங்கே சென்றிருந்தன? இதற்குப் பதில் கூறாமல் பழைய சிந்தனை மீண்டும் தொடர்ந்தது.

—அடுத்த பக்கம்—


## திராவிட முன்னேற்றக் கழக திருச்சி மாவட்ட 3-வது மாநாடு

**அறிவிப்பு.**

துறையூரில் ஜூன் 20, 21 சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறவிருக்கும் திருச்சி மாவட்ட 3-வது மாநாட்டிற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மிகப் பெரிய அளவில் சுமார் 50 ஆயிரம் பேர் உட்காரக்கூடிய அளவில் பந்தல் வேலை செய்து, முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பந்தல் முகப்பு வேலையை முடிக்க மாயவரம் தோழர் அண்ணாமலை குழுவினர் பொறுப் பேற்றுள்ளனர். மேலும், மின் ஒளி, ஒலி ஆகிய வேலைகளில் மாவட்ட மாநாட்டை மாநில மாநாடு என்று கருதக்கூடிய அளவில் மிக அழகாக அமைக்க தோழர் ராபி அவர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளார். மற்றும், தண்ணீர்வசதி, சாப்பாட்டு வசதி, தங்குமிட வசதி முதலியவைகளை மிகச் சிரிய முறையில் திறம்பட செய்து தருவதற்கு வரவேற்புக் குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். திருச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும், துறையூருக்கு போதுமான பஸ்கள் விட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாநாடு வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பொதுமக்களும், கழகத் தோழர்களும், எல்லா வகையிலும் ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**எம். பி. முத்துக்கருப்பன்,**
**எஸ். நெடுமாறன்,**
மாநாட்டுச் செயலாளர்கள்.

# வள்ளுவர் இருந்த இடம்- புதிய கருத்து

அண்மையில் இலங்கை எங்கும் திருவள்ளுவர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அப்போது நிகழ்ந்த கூட்டம் ஒன்றில், ஈழத்துத் தமிழ்ப் பேராசிரியர் திரு. மு. கணபதி(ப்பிள்ளை) அவர்கள், திருவள்ளுவர் பிறந்த இடம் குறித்து ஒரு புதிய கருத்தைத் தந்துள்ளார். இலக்கிய நண்பர்களின் சிந்தனைக்கு வேலை தருவது அது. எனவே அதன் முக்கியப் பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம்.—ஆ-ர்.

தென்னாட்டிலுள்ள மொழிகளிலே தொன்மை சான்றதும் சிறந்த இலக்கண இலக்கிய நூல்களைக் கொண்டதும் தமிழ் மொழியேயாகும். திராவிட மொழிகளின் தாயும் அதுவேதான். ஆனால் இன்றைய ஆராய்ச்சியானது மேலும் பல படிகளைக் கடந்து சென்று தொன்மை வாய்ந்ததெனக் கருதப்பட்ட சமஸ்கிருதத்தின் தாயைப் பெற்ற தாயும் அது-உலக மொழிகளின் தாயும் அதுவேதான் என்று நிறுவ முனைகின்றது. அந்த ஆராய்ச்சி முடிவு ஒரு சாராக மக்களினத் தொட்டிலும் நாகரிகத்தின் பிறப்பிடமும் இலங்கையை உள்ளடக்கியதால் நிலவியதொரு தென்னாட்டுப் பெருநிலப் பரப்பே என்ற உண்மையும் முதலில் மேனாட்டிலே பிறந்து, படிப்படியாக வளர்ந்து வருகின்றது. தமிழிலக்கிய நூல்களின் சான்றுகளால் நாளுக்கு நாள் வலுப்பெற்றும் விளங்குகின்றது.

இன்றைய தென்னாட்டு மொழிகளிலே கடல்கடந்து உலகளாவிய தாய் பல வேறு நாடுகளிலும் பேசப்பட்டுவரும் ஒரு மொழி தமிழேயாகும். தமிழர்கள் இன்று பல நாடுகளிலும் பெருந் தொகையினராய்ப் பரவி வாழ்கின்றனர். அவர்கள் பல நாட்டினராயும் பல சமயத்தினராகவும் உள்ளனர். எனினும் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகப் பொதுமறையாக விளங்குவதால் அவர்கள் எல்லோரையும் ஒன்றுபடுத்துகின்றது. தமிழன் உயிர்நிலை திருக்குறள். தமிழின் உயிர்நிலையும் அதுதான். திருக்குறளின் பெருமையாலும் திருவள்ளுவரின் பெயராலும் உலகத் தமிழ் மக்கள் ஒன்று கூடுகிறார்கள். திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடுகிறார்கள். உண்மையில் இன்றைய உலக நாடுகளுக்கெல்லாம் திருக்குறளே தமிழரை அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

**இந்த வள்ளுவரை ஆதரித்த புரவலன் எல்லாளன்-ஏழாளன். இவனையே திருவள்ளுவரின் மாணவன் எனவும் மரபுரை குறிப்பிடுகின்றது. ஏழாளன் இந்நாடு கண்ட பழந்தமிழ் மன்னன். அன்புக்கும் அறனுக்கும் நடுநிலைக்கும் நிலைக்களனாய் விளங்கிய பேரரசன். இம்மன்னன் இலங்கையை ஆண்டகாலத்தின் அக்காலத்திலே திருவள்ளுவரும் உடனிருந்து திருக்குறளை இலங்கையிலேயே இயற்றியிருத்தல் கூடும் எனக் கருதலாம்.**

ஜெர்மனியப் பேரறிஞரான "அல்பேட் சுவைட்சர் என்பார், இந்தியாவின் கருத்து முறைகளும் அவற்றின் வளர்ச்சியும் என்னும் நூலிலே, "சமயாசாரியர்களான சங்கரர், இராமானுசர், இராமநந்தர் ஆகியோரின் கருத்துக்களுக்கும் இராமகிருட்டிணர், விவேகாநந்தர், காந்தியடிகள் ஆகிய அருளாளர்களின் பண்புகளுக்கும் மூல முதலைச் சமஸ்கிருதத்திலோ வேறு பிற மொழிகளிலோ உள்ள எந்த நூலிலும் காணமுடியாது. அவை யாவும் திருவள்ளுவரின் திருக்குறள் வகுத்த விழுமிய மரபில் வந்தவையாகும்" எனத் திருக்குறள் மரபினைத் தனி மரபாகக் குறிக்கின்றார். அது பொருத்தமானதே.

உண்மையில், வேத ஆரியரைத் தென்னாட்டில் எதிர்த்த புத்த சமண அலைகள் தென்னவன் ஆகிய இலங்கைத் தமிழ்மன்னன்-இராவணன்-மரபில் எழுந்து வளர்ந்து வந்தவை. திருக்குறள் வடிவில், காலடைவில் உருவாகிப் பரந்தவை. பேரறிஞர் சுவைட்சர் குறித்த தனி மரபு இராவணன் காலத்தில் எழுந்த மரபேயாகும்.

விசயன் இலங்கையிலே கால் வைப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே - புத்தர் பெருமான் இலங்கைக்கு வந்து அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழர்களாகிய இயக்கர்களுக்கும் நாகர்களுக்கும் போதனை செய்வதற்குமுன்பே இராசாவளியின்படி கி.மு. 2387-ம் ஆண்டளவில் தமிழ் வேந்தனாகிய இராவணன் இலங்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்திருக்கிறான். மூவேழ் உலகத்துக்கும் தலைவனாய் "திரிலோகம்" எனப்படும் மூ நாட்டையும் "சப்த லோகம்" எனப்படும் ஏழ் (எழு) நாட்டையும் ஆண்டிருக்கிறான்.

இராவணன் தமிழ் நாட்டு மன்னன்; புலத்திய முனிவரின் வழி வந்தவன். இயக்கன் நாக பரம்பரையினன். சிவநெறிச் செல்வன். அக்காரணத்தினாலேதான் அவனுடைய தலைநகராயிருந்த இலங்கையிலேயுள்ள மிகப் பழைய திருக்கோயில்கள் யாவும் சிவன் கோயில்களாயுள்ளன. அன்பும் அருளும் சார, அறத்தின் அடிப்படையில், ஆரியரின் வேள்வி முறைகளையும் உயிர்களைக் கொன்று குவிக்கும் ஆரியர் யாகங்களையும் முதன் முதலில் எதிர்த்த தனித் தமிழ் மன்னன் இராவணனே ஆவான். அவனுடைய ஆட்சியிலே ஆரியரின் கொடிய வேள்விகளை அழிக்கப் பெண்டுகள் கூட முன் வந்து உழைத்ததாக இராமாயணமே கூறுகின்றது.

## மதுரைத் தோழமைக் கழக ஆண்டு விழா

பல அலுவலகங்களிலும் பணிபுரியும் தோழர்கள் பலர் அமைத்துக்கொண்ட அமைப்புத்தான் மதுரைத் தோழமைக் கழகம். இக்கழகம் மொழிவளர்ச்சி, இனவாழ்வு முதலிய நல்ல பல குறிக்கோள்களுடன் பாடுபட்டு வருவதாகும். பல இயக்கங்களைச் சார்ந்த அரும்பெரும் தலைவர் பலர் கழகத்தின் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கின்றனர். வெற்றிநடை போடும் இக்கழகத்தின் முதலாம் ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது. மதுரை சந்திரா திரை அரங்கில் 31—5—59-ல் நிகழ்ந்த இவ்விழாவிற்கு, இக்கழகத் தலைவர் மா. நடராசன் தலைமை ஏற்றார். தோழர் மஸ்தான் அனைவரையும் வரவேற்றார். செயலாளர் பகவதி ஆண்டு அறிக்கையைப் படித்தார். பின்னர் துரை. நடராசன் அவர்கள் பேசினார். அடுத்துப் பேசிய ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் தலைவணங்காத் தென்பாண்டி நாட்டின் பெருமை கூறினர். தோழர் தங்கப்பாண்டியன் தீர்மானங்களை வாசித்து நிறைவேற்றினர்.

விழாவிற்குப்பின் உடுப்பி விடுதியில் கழகத்தவர் விருந்தோன்றும் நடத்தினர்.

மொழி ஆர்வமும் இனஉணர்வும் மிக்க இக்கழகத்தின் பணிகள் மேலும் சிறக்கவாழ்த்துகிறோம். இதன் தொண்டுகளைப் பாராட்டுகிறோம்.

★ ★ ★

—முன் பக்கத் தொடர்ச்சி—

செயற்கைச் சிறையில் அடைபட்டுள்ள செல்வத்தை சிறை மீட்க வேண்டும். பொன்னைப் புதைத்து வைத்திருந்த பூமியைத் தகர்க்கும் பொழுது அதிர்ச்சியும் ஒலியும் உண்டாவது இயல்பு. செயற்கைச் சிறை சிதறும்போதும் அவை தோன்றலாம். சில வேளை செந்நீரும் வழிந்தோடலாம். ஆனால் அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை. நமது உயிர் பிரிவதைத் தடுத்து நிறுத்திக்கொள்ள, செல்வத்தைச் சிறைப்படுத்தியோரின் குருதி சிறிது சிந்தினால்தான் என்ன? சிறைப்பட்டிருக்குமிடத்தை இனி ஆராய வேண்டியதுதான்!

சிந்தனை வேகத்தில் நேரம் பறந்து விட்டதைக் கந்தசாமி உணரவில்லை. மாலை நேரத்து மஞ்சள் வெய்யில் மரங்களையும் மண்ணையும் பொன்னாக்கிக்கொண்டிருந்தது. ஆர்ப்பரித்துக்கொண்டிருந்த ஆதவனின் கிரணங்கள் மெதுவாக அடங்கிக் கொண்டு வந்தன. ஆராயும் கண்கள் எல்லாத் திக்குகளிலும் சுழல கந்தசாமியின் கால்கள் சாலையை நகர்த்திக்கொண்டிருந்தன. இரு புறங்களிலும் எண்ணற்ற இல்லங்கள்; அவற்றைக் காத்து நிற்கும் இரும்புக் கம்பிகளிட்டக் கதவுகள்! உள்ளே இரும்பு உள்ளங்கள்! உயிரற்றது எனக் கருதப்படும் சிறு பொருளிலிருந்து உலகை நடத்தும் அரசாங்கம்வரை அவனுக்கு எதிரிகள்! இருளிலே தடவும்பொழுது தவறுதலாக விரல் சிறு பாத்திரத்தின்மேல் பட்டுவிட்டால், அடேயப்பா! அலறி விழுந்து அது தன் எஜமானனை எழுப்பப் போடும் கூப்பாடு! உடனே அவர் ஒலி எழுப்ப, தான் போலீஸ்காரர்களின் பிடியிலே சிக்க, பிறகு இரும்புக் கம்பிகளுக்குப் பின்னால் எத்தனை ஆண்டோ? அதற்குள் நம் மனைவி மக்கள்? அவர்களை மீண்டும் ஒரு முறை பார்த்து ஆறுதல் கூற வேண்டும். பிறகு நமது திட்டம் இருக்கட்டும்.

மறந்துவிட்ட அன்பு முகங்களை மறுபடியும் காண மனம் நினைந்து விட்டால் அது துடிக்கும் துடிப்பு! மதம் பிடித்த யானைதான்! தொலைவில் வானை நோக்கி உயர்ந்து நின்ற கோபுரத்திலிருந்து மின் விளக்கின் ஒளி வீசியது. கோயிலின் வாயிலை அடைந்த கந்தசாமி உள்ளே நோக்கினான். ஒரு சிறு அகல் விளக்கு. பிரியப்போகும் உயிரைப்போல் நடுங்கிக்கொண்டிருந்தது அதன்சுடர். அருகே சிலை. கைகூப்பி வணங்கிய கந்தசாமி விரைவில் தன்னை மனைவியுடன் சேர்த்துவிடுமாறு வேண்டிக்கொண்டான். நடந்துவந்த களைப்பும், பசிமயக்கமும், கவிந்த இருளும் அவனை அங்கேயே நிறுத்திவைத்தன. கதவின் அருகிலிருந்த உயரமான வெளித்திண்ணையில் உடலைச் சுருக்கிப் படுத்தான். எதிரில் ஊராட்சி மன்றத்தால் வைக்கப்பட்டிருந்த வானொலி அன்றையச் செய்திகளைப் பரப்பிக்கொண்டிருந்தது. வானொலி கேட்க வந்தவர்களில் இருவர் ஆலயத்தின் வாசற்படியில் அமர்ந்தனர். வானொலி, இந்தியாவிற்குப் பர்மாவிலிருந்து அரிசி வரப்போவதாகச் செய்திகூறியதும் நாட்டின் உணவு நிலைமை குறித்து அவர்களின் பேச்சும் ஆரம்பமாகியது.

"என்ன தம்பி! இன்னைய பேப்பர்லே ஒரு சேதி பாத்தியா? பசி பொறுக்காமே ரெண்டுபேர் செத்துப்போயிட்டாங்களாம்!" என்றான் உயரமானவன். இரக்கப்படுபவனை சிறிது தலையைத் தூக்கிப் பார்த்த கந்தசாமி மறுபடியும் தலையைத் தரையில் சாய்த்தான்.

"அதுதான் ஏராளமா இருக்கே அண்ணே! பத்திரிகைக்காரங்களுக்குத் தெரிஞ்சி ஒண்ணு தெரியாமே பத்து!" என்றான் மற்றவன்.

"ஆனா இது ரொம்ப மோசந்தம்பி. பெத்த தாயே தன் புள்ளைகளை ரயிலுக்கடியிலே தள்ளிப்புட்டுத் தானும் விழுந்துட்டாளாம்! ஆனா தவறி ஒரு புள்ளே கொஞ்சம் எட்டி விழுந்ததனாலே உயிர் பொளைச்சுக்கிட்டதாம். அது அவுங்களைப்பத்திய செய்தியையெல்லாம் சொல்லிச்சுன்னு போட்டிருக்கு தம்பி!"

"என்ன சொல்லுச்சாம்?"

"அப்பாரு ஒரு நெசவாளியாம். பொளைப்புக் கிடைக்காமலே அவரு குடும்பத்தை விட்டு ஓடிட்டாராம். அம்மா தன்னையும் அண்ணனையும் சோறு கிடைக்குமுன்னு சொல்லி அழைச்சுக்கிட்டு வந்து ரயிலிலே தள்ளிட்டு தாம்! அம்மா பேரு கமலம்..."

"போயிட்டியா கமலம்?" வெடித்தது அலறல். பறந்துவிட்டனர் பத்திரிகைச் செய்திக்குப் பரிதாபப்பட்டவர்கள்! பாவம், வேறு என்ன செய்யமுடியும் அவர்களால்? நெசவாளியாகப் பிறந்தது அவன் குற்றம்! திண்ணையிலிருந்து கீழே விழுந்த கந்தசாமி சில விநாடிகள் 'கமலம்! மாணிக்கம்!' என்றுமுணகிக்கொண்டிருந்தான். பிறகு அவனும் அந்தக் கருங்கற்படிக்கு அடுத்த இரண்டாவதுப் படிக் கல்லாக ஆகிவிட்டான்.

வானொலிப் பெட்டியிலிருந்து, இசைப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.

**"பஞ்சி லாடையும்**
**பட்டிலாடையும்**
**கொஞ்சமோ இங்கு! தமிழா?**
**பஞ்சமேதடா பசியுமேதடா**
**பாரில்**
**உயர்ந்த உன் நாட்டில்..."**

**--கே. சிங்காரவேலு**

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

ஜாதிப் பட்டத்தை வெட்டி எறிந்து அன்பழகன், நெடுமாறன், நெடுஞ்செழியன், மதியழகன், செழியன், மாறன் என்று வைத்தார்களே தவிர தமிழுக்காக பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளும் பிறகட்சியினர் இன்றும் கிராமணியார், நாடார் என்று வெட்கமில்லாமல் தங்கள் பெயருடன் ஒட்டவைத்துக் கொள்கிறார்கள். புதிதாகக் கிளம்பியிருக்கும் நாம்–தமிழர் இயக்கம் நம்முடைய கடந்த கால உழைப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று தப்புக்கணக்கு போடுகிறது. செயலாளர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் பணம் கொடுத்து கட்சியை வளர்த்தவர்களில்லை நாம். உடையார்பாளையம் வேலாயுதம், அப்துல்மஜீது, வண்ணைப்பாண்டியன், தூத்துக்குடித் தங்கம் தோழர் சாமி, தாளமுத்து – நடராசன், அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி போன்றவர்களின் தியாகத்தால் உருவாக்கப்பட்ட விடுதலை முகாம் நமது கழகம். சமுதாய மறுமலர்ச்சிக்கு இவர்களுடைய சவங்களைக் காணிக்கையாக அளித்துவிட்டபிறகுதான் அரசியலில் நாம் இறங்கியிருக்கிறோம். இன்று சென்னையிலே நமது தோழர் அ பொ. அரசு மேயராக இருக்கிறார் என்றால் நாம் அன்று செய்த சமுதாய சீர்திருத்தப் பணிதான் காரணம் என்பதை மாற்றார் உணரவேண்டும். சீர்திருந்திய சமுதாயத்தில்தான் ஜனநாயகம் வெற்றிபெறும். ஜனநாயக வழி வரும் நாம் பெற்ற வெற்றி சீர்திருந்திய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டு. தமிழன் என்கிற மொழி உணர்ச்சியை ஊட்டிய நம்மைப் பார்த்து இவர்கள் தமிழ்நாடு பிரிவினையை எதிர்க்கிறார்கள் என்று கூறுகிறது ஒரு கட்சி. ஆந்திர நாடு ஆந்திரர்க்கே, மலையாள நாடு மலையாளிகளுக்கே, கன்னட நாடு கன்னடியர்க்கே, தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடர்க்கே என்று அன்று நாம் சொன்னபொழுது இன்றையதினம் சுதந்திர தமிழ்நாட்டைப்பற்றி பேசுகிறவர்கள் ஆனந்த விகடனோடு சேர்ந்துகொண்டு 'எலிவளை எலிகளுக்கே' என்று கேலி பேசியதை தமிழகம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறது. மொழிக்காக நாம் போராடிய நேரத்தில் இவர்கள் எல்லாம் எதிர்முகாமிடம் இருந்துகொண்டு நம் எலும்புகளை எண்ணிப் பார்ப்பதற்கும், தசைகளைப் பங்கு போடுவதற்கும்துடிதுடித்துக்கொண்டிருந்தார்கள். சாதிகளை ஒழித்து தூய தமிழில் தங்கள் பெயரை மாற்றி தி. மு. க. வழி பின்பற்றுவதை விட்டுவிட்டு மறைந்துபோன சாதி உணர்ச்சிக்கு புத்துயிர் ஊட்டுகிறார்கள் சமுதாயத்தை நாமெல்லாம் ஒரே குடும்பம் என வாழ்ந்து வருகிற நேரத்தில் தமிழன் என்ற சாதி உருவாகி வருகின்ற இந்த நேரத்தில் மீண்டும் சமுதாயத்தை சாக்கடை ஓரத்திற்கு இழுத்துச்சென்று அதன் மூலம் தி. மு. கழகச் செல்வாக்கை குலைத்துவிட முயல்கின்றனர். மாற்றுக்கட்சி உருவாக்கிய நல்ல தலைவர்கள் தி. மு. கழகத்தை ஒழித்துக் கட்டுவதற்கு, சமுதாயத்தை சாய்த்து விடுவதற்கும் முயல்வது கீழ்த்தரமான செயல். ஆனாலும் ஒன்று தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். சமுதாயச் சீர்திருத்தத்தை வெற்றிகரமாக நடத்திவிட்டது, தி. மு கழகம். "உலகெல்லாம் பரவியிருக்கிறது எம் மதம். கிறிஸ்துவ மதம் அது புகாத இடம் இல்லை" என பெருமை பேசுகின்றனர், கிறிஸ்துவத் தோழர்கள். அத்தகைய கிறிஸ்துவமதத்தால் தமிழ் நாட்டில் கட்டப்பட்டிருக்கும் ஜாதிக் கோட்டையைத் தகர்த்தெறிய முடியவில்லை. ஆறுமுகம் பிள்ளை கிறிஸ்துவரானால் தன் பெயரை அந்தோணி முத்துப்பிள்ளை என்று வைத்துக்கொண்டு தனக்கென ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொள்கிறான். "நான்பிள்ளைமார் வகுப்பை சேர்ந்தவன். அதன் பிறகுதான் கிறிஸ்துவன்" என்ற சொல்லக்கூடிய ஜாதி வெறி பிடித்த எல்லா வகுப்பார்களுக்கும் இன்று கிறிஸ்துவ மதத்தில் இடம் இருக்கிறது. முத்தையா மூப்பனார் மோசஸ் மூப்பனாரானாலும் அதைத் தட்டிக் கேட்கக் கிறிஸ்துவ மதம் தவறிவிட்டது. ஐயகோ! "எல்லோரும் உன் சகோதரர்கள். உன்னைப்போலவே பிறரையும் நேசி" என்ற கிறிஸ்துவின் உன்னதக் கொள்கையை காலிலே போட்டு மிதித்துத் துவைக்கின்றது, இன்றைய கிறிஸ்துவ மதம். மதம் மண்டியிட்ட அந்த இடத்தில் கழகம் வென்றது. இதை யாரும் இன்று மறுக்க முடியாது. சர்வேசுவரன் சந்ததியினர் சாதித்துவிட்டார்கள் எனச் சரித்திரம் புகழ் பாலாம்!! ஆண்டவன் அனுப்பிய அவதாரங்கள் அழிக்கமுடியாததை அண்ணா பரம்பரை அழித்துவிட்டது 'நாமெல்லாம் இன வழிப்படி திராவிடர். மொழி வழிப்படி தமிழர்' என்கின்ற அண்ணாவின் பொன்வாக்கு மதத்தைப் பார்த்து எள்ளி நகையாடுகிறது. "ஏற்றத் தாழ்வு நீங்குமென்று ஏசுகிறிஸ்து மதத்தில் சேர்ந்தேன் உயர் ஜாதிக் கிறிஸ்துவர்களிடம் நான் பட்ட பாடு அப்பப்பா..." என்று கதறுதீர். தாழ்த்தப்பட்டோரே! அண்ணாவின் அறிவியக்கக் குடும்பத்தில் அவர் தம்பியாய் சேர்ந்திடுவீர்! இப்படி அன்றே அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி அறைகூவல் விடுத்தார். அதன் விளைவுதான் இன்று நாம் பெற்றிருக்கின்ற மாபெரும் வெற்றி. வண்டியிழுக்கும் வடிவேலுவுக்கும் மூட்டை தூக்கும் முனிசாமிக்கும் அரசியல் அறிவு புகட்டினார் அண்ணா அதன் பயன்தான் இன்றைய தினம் நாம் பார்க்கும் பூத்துக் குலுங்கும் புது மலர்க்காடு 'எல்லோரும் அண்ணாவின் தம்பிமார்கள்' என்றுமுரசொலிக்கும் தேன்கூடு, இந்நாட்டு தமிழ் மாந்தரை வாழ்விக்க வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதன் வழி வாரீர்! சுதந்திர சோஷலிஸ திராவிடக் கூட்டாட்சி அமைப்போம் எனக் கூவி அழைக்கிறேன், மதிப்பிற்குரிய மாற்றுக் கட்சி தோழர்களே.

—ஜோசப் பெஸ்கி பி. ஏ.

# "சிவகெங்கைச் சீமை"

'சிவகெங்கைச் சீமை' திரைப்படம் தமிழ்ப்பட உலகம் கண்டிராத அளவு பரபரப்பை ஏற்படுத்தியது. பண்டைத் தமிழர் நாகரிகம் அணுவளவும் சிதறாமல் எடுக்கப்பட்ட படம் என்று அறிஞர் பெருமக்கள் புகழ் மாலை சூட்டினார்கள். "இந்த வரலாற்றை இப்படித்தான் எடுக்கமுடியும்" என்று திராவிட மக்களின் ஒரே தலைவர் **அறிஞர் அண்ணா** அவர்கள் உரைத்தார்கள்.

★ "முழுவடிவம்! முழு அழகு! நகைச் சுவை இல்லையே என்ற குறை தெரியாமல் படத்தை எடுத்த முறை; ஒவ்வொரு கட்டத்திலும் இதயத்தைத் தொட்டுத் தழுவும் பாட்டு; குறுகிய காலத்தில் இது அபார சாதனை!" என்று பெருமிதம் பொங்கக் கூறினார்கள் சொற்செல்வர் **ஈ. வே. கி. சம்பத். எம். பி.,** அவர்கள்.

★ வழக்கறிஞர் **வி. வி. இராமன்** அவர்கள் 'விடியும் விடியும்' என்ற பாடலைக் கேட்டுத் தன்னை மறந்து கண்ணீர் சொரிந்தார்கள்.

★ முதுபெரும் புலவர் பேராசிரியர் **மயிலை. சிவமுத்து** அவர்கள் "படம் பார்க்கவில்லை நான்; 'சிவகெங்கைச் சீமை'யில் குடியிருந்துவிட்டு வருகிறேன்" என்று கூறினார்கள்.

★ நீதிபதி **எஸ். ஏ. அய்யாசாமி செட்டியார்** அவர்கள் "அற்புதம்! அபாரம்!" என்று இரண்டே வார்த்தைகளில் புகழ்ந்தார்கள்.

★ பிரசித்திபெற்ற நாவலாசிரியர் **'அகிலன்'** அவர்கள் அகம்மலர, முகம் மலர, மெய் சிலிர்க்கப் பாராட்டினார்கள்.

★ பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரையார்** அவர்கள் "தென்மொழிக்கு இது ஒரு சீதனம்" என்றார்கள்.

★ விஜயா அதிபர் **நாகி ரெட்டி** "பிரமாதம் கண்ணதாசன்! பிரமாதம்! ஈடு இணையற்ற முயற்சி!" என்று புகழ்ந்தார்கள்.

★ பத்துக்கு ஒன்பது வெற்றிப் படங்களாகத் தயாரிக்கும் பட்சிராஜா அதிபர் **ஸ்ரீராமுலு நாயுடு** அவர்கள், "இருபத்தைந்து ஆண்டு பட உலக சரித்திரத்தில் இதுபோன்ற தெளிவான கதை அமைப்பும், அழகான படப் பிடிப்பும், செம்மையான டைரக்ஷனும் அமைந்ததே இல்லை" என்று பாராட்டியதோடு, கதையழகுபற்றியும், கருத்தழகுபற்றியும் காண்பவரிடத்திலெல்லாம் உற்சாகத்தோடு புகழ்ந்துரைத்தார்கள்.

★ பரணி **இராமகிருஷ்ணா ராவ்** அவர்கள், "கனவு கண்டேன் நான், கனவு கண்டேன்" என்று பாடிப்பாடி மகிழ்ந்தார்கள்.

★ மக்கள் மனமறிந்து படமெடுக்கும் டைரக்டர் **பி. புல்லையா** அவர்கள், "எப்படிப் புகழ்வது? வார்த்தையில்லையே புகழ! 'சிவகெங்கைச் சீமை' ஒரு சகாப்தம்!" என்று பாராட்டினார்கள்.

★ பட உலகம் போற்றும் ஜெமினி அதிபர் **எஸ். எஸ். வாசன்** அவர்கள், படத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் புகழ்ந்து பேசினார்கள்.

ஒருவரா, இருவரா?...அறிவுள்ள மக்கள் எண்ணற்றவர் பாராட்டினார்கள்.

பல இலட்சக்கணக்கான மக்களால் தினந்தோறும் படிக்கப்படும் **'தினத்தந்தி'** புகழ் மாலை சூட்டியது. விமர்சனத்தில் தனி பாணியைக் கையாளும் **'குமுதம்'** "தரமான படம்" என்பதாக எழுதியிருக்கிறது. **'நவ இந்தியா'** 'நல்ல படம் பார்த்தோம்' என்றது. திரையுலகின் ஒரே தினசரியான **'தென்றல் திரை'** ஒரு சிறப்பு மலரையே உருவாக்கிற்று.

மதுரை மக்கள் திருவிழாவே கொண்டாடினார்கள்.

ஆனால்...**'கல்கி'** என்றொரு 'பஞ்சாங்கம்' மட்டும் 'வினோத ரச மஞ்சரி'யாக விமர்சனம் வெளியிட்டது. பாட்டுப் புத்தகத்தைப் பார்த்துவிட்டு, அந்தப் "பாட்டிகள் பத்திரிகை" படத்தில் இல்லாத ஒரு பாட்டுக்கு ஜனங்கள் கரகோஷம் செய்ததாக எழுதியுள்ளது. ஆமாம்; அந்தப் பாட்டு படத்திலேயே இல்லை; ஜனங்கள் கேட்டுவிட்டுக் 'கரகோஷம்' செய்தார்களாம்! வெறி நாய்க்குத் தன் காலும் தெரியாது; பிறர் காலும் தெரியாதல்லவா! போகட்டும்! இன்னொரு வேடிக்கை: **'தளர்தல்'** என்ற வார்த்தைக்கும், **'தளத்தல்'** என்ற வார்த்தைக்கும் பேதமிருப்பதே 'கல்கி'க்குப் புரியவில்லை! 'சாந்துப் பொட்டு தளதளங்க' என்பது பாட்டு. 'தளதளத்தல்' என்றால் 'பொதும்பி நிற்றல்' என்பது பொருள். வீரனின் வேர்வைபட்டு, பொட்டு பொதும்பி நிற்பது வீரத்தின் அறிகுறி. 'கல்கி' விமர்சகர் இனியாவது தமிழ் படிப்பாராக! இன்னொரு வேடிக்கை: மருதுபாண்டியரும் ஊமைத்துரையும் கோழைகளாகப் படைக்கப்பட்டிருப்பதாக 'சுதேசமித்திரன்' விமர்சகரும், 'கல்கி' விமர்சகரும் கூறுகிறார்கள். மருதுபாண்டியர் இடைவிடாமல் சத்தம் போட்டுப் பேசி இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்களா? அவர்களுக்கு ஒரு வார்த்தை. 'விவேகமில்லாத வீரத்தைவிட (ஆயிரம் பீரங்கி வைத்திருப்பவனைக் கண்டு அரையடி வேல் கம்பு வைத்திருப்பவன் பயப்படாமல் சத்தம் போடுவது நாடகம்!) ஓரளவு பயந்து செயல்படுவது மனித குணம்! 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' 'வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும், துணை வலியும் தூக்கிச் செயல்'படுபவன்தான் அறிவுமிக்க வீரமுள்ள தலைவன்! போரிலே தோற்றுப் போய், கொல்லை வழியாகக் காட்டுக்கு ஓடுபவனைவிட போரையே தடுக்க நினைப்பவன் அதிகப்படியான வீரன்தான்!

சிட்டு "கமலா"வின் "ஊழிக்கூத்து நடனம்" ஆழ்ந்த பொருள் உள்ளது. துணைக்கண்டத்திலேயே கடைசியாக நின்ற சுதந்திர நாடு சிவகெங்கை. அதன் அரசியல் வீழ்ச்சி ஒரு ஊழியின் முடிவு என்பது அந்த ஊழிக்கூத்தின்மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. நிற்க,

வயிற்றெரிச்சலோடு விமர்சனம் செய்தவர்கள்கூட, திக்கித் திணறி முக்கி முனகி, விக்கி, விம்மி, பாராட்டும் அற்புதம் ஒன்று இந்தப் படத்திலிருக்கிறது:

**அதுதான் பாட்டு!**
தமிழ் உள்ளங்களுக்குப் பாடல்கள்...
**தேன்! தேன்! தேன்!**
உள்ளம் இல்லாதவர்களுக்கு அவை...
**தேள்! தேள்! தேள்!**

பாருங்கள்!          கேளுங்கள்!          மகிழுங்கள்! ★

# சதகப் போட்டி

பழுத்தபின் உண்ணலாம் என்றெண்ணி இலவினைப்
பாதுகாத் திட்டகிளி போல்
பகலெலாம் இரவெலாம் எழுதிஎதிர் பார்க்கினும்
பலனெதும் காணவில் லை!
கழுத்தது நீரிலே மூழ்குகையில் நீந்திடக்
கல்லாது போனே மெனக்
கலங்கினுற் பயனெதும் விளையுமோ? இச்செயல்
கண்டவர் நகையார்க ளோ?
எழுத்தினால் வாழலாம் என்றெண்ணி ஏமாந்த
ஏழையர் பலரா வரே!
இதமான தொழில்செய்து வாழாமல் ஏனிந்த
ஏமாற்ற மெய்தவேண் டும்!
வழுத்திலை விரியுமென் றஞ்சியே விடுத்தனன்;
மற்றினிச் சொல்வதென னே!
வருகாதல் தமிழிலே தருவாழ்வு வாழ்ந்தபேர்
வளருநாள் எந்தநா ளோ?

—எ. எஸ். பாவலர், கோவை.

★

தந்திரம் இலா அரசு, சுந்தரமில் லாதபெண்
தண்ணொளி இலாத நிலவு
மழலைஇல் லாதமனை, மாரியில் லாதபயிர்
மறுமணமி லாத விதவை.
தாமரையி லாதகுளம், தானமில்லாச் செல்வம்
தங்கமில் லாத அணிகள்
இன்சுவை இலாதகனி இன்பமில் லாக்கலவி
எதிரியில் லாத மன்றம்
கொழுநனில் லாதமங்கை கொள்கையில் லாதகொற்றம்
கொழுகொம்பி லாத முல்லை
வாடையில் லாதகுளிர் தென்றலில்லாக் கோடை
வாகையில் லாத வீரம்
அச்சுஇல் லாததேர் ஆகுமிவை பயனில்லா
அழிவை உண்டாக்கு மென்பர்
அனுதினமும் மனதிலுறை தமிழகமும் உயனுறவே
அறப்பணி மிகச்செய் வையே.

—பி. கே. சாமி, திருப்போரூர்.

★

சலங்கையும் கைவளையும் சதிராடு மவளென்னை
சந்திக்க வேண்டுமென் றே
சலசலவென் றொலிபரப்பிச் சடுதியில் என்னுளத்தைச்
சங்கடத்தி லாழவைத் தே
இலங்கிழை தோன்றினள் என்னுளங் கவர்ந்தென்னை
இடர்பட வைத்துமறைந் தாள்
இருப்பினும் அடிக்கடி என்னுளக் குறிப்புரை
இன்முகங் காட்டிவரு வாள்
புலங்கொளல் மிகவரிது என்றுநான் ஏக்கமுறப்
பொல்லாத மாலை வேளை
புசைந்திடுமென் நெஞ்சினில் புகுத்தினள் காதலைப்
புதியநோய் வாட்டுதந் தோ
கலங்குமென் உள்ளத்தைக் கடைக்கண்ணால் தாக்கியே
கடிதினில் மறைந்ததே னோ
கார்முகிலைக் கண்டுமனங் களிப்புற்றுத் தோகைவிரித்
தாடுகின்ற கான்மயி லே.

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

நீளாழிச் சீற்றங்கள் பலபோது நிகழினும்நீ
நிலைகுலையில் தாழ்ந்ததில் லை!
நெஞ்சுருகும் படியான பேரின்னல் பலபோதும்
நேர்ந்திடினும் குலைந்ததில் லை!
கோளாகப் புறப்பண்பு புகுந்துன்னை மிரட்டிடினும்
கொஞ்சமும் அஞ்சலில் லை!
கோலம்ஆர் பைங்குறள்முன் அலையெலாம் புறங்காட்ட
ஒருமகனை ஈன்றுதந் தாய்!
மாளாத செழுங்கலைகள் பலகோடி உலகுக்கு
வழங்குவதில் சளைத்ததில் லை!
மறமெல்லாம் அறம்நிரம்பி வழிந்தோடும் வரலாற்றுப்
பெருநூல்கள் உருவில்நின் றுய்!
கேளாத செவியுண்டோ! பாடாத வாயுண்டோ!
கிளர்ந்தெழா உளந்தானுண் டோ!
கிழமையுடன் தென்றலுனைத் தன்மடியில் தாலாட்ட
சதகமருள் தமிழ்த்தெய்வ மே.

—மு. சா. கோ., செக்கானூரணி.

★

முரசொலி படிக்கிறவன் புதியோனே யாயினும்
முழுமதி யுடையனா வான்
முத்தாரம் தன்னையே சித்தமொடு கற்பவன்
முதறிஞ னாகிவிடு வான்
அரசியல் தெரிகிறவன் அன்றாடம் நம்நாடு
ஆர்வமொடு கற்கவேண் டும்
அயலார்க் கறிவுரை அளிக்கவிழை கின்றவன்
அண்ணாசொல் கேட்கவேண் டும்
கரமதில் தொட்டாலும் தென்றல்நம் மனத்தினில்
கற்பனை யூற்றெடுக் கும்
காதினாற் கேட்கினும் கவியரசாக்கிடும்
கண்ணதா சன்கவிதை காண்
அரசர்க் கரசனாய் ஆரியம் கடந்தஎம்
அறவடி வானதமி ழா!
அண்டையோ ரொடுங்கவே எண்டிசையும் போற்றவே
ஆண்டநற் றண்டமிழ னே.

—அ. கவியரசு, கடூர்.

★

கண்ணனைய தாய்நாட்டின் காவலராய் காங்கிரசார்
கையில்செங் கோலேந்தி னார்!
காணாத காட்சியெனக் கண்டுகண் டின்புற்று
கருத்திற்பல் லாண்டிசைத் தார்!
எண்ணமதைச் செயலாக்கி ஏழ்மையிலே தானுழலும்
எளியவர்கள் வாழ்வு மல ரும்,
ஏற்றமும் தேற்றமும் இழிவாக்கும் தாழ்மையும்
இல்லாது பேதம் ஒழி யும்,
பண்ணனைய சுவைத்தமிழர் பாங்குடனே இவ்வுலகில்
பண்பொளிர வாழ்வர்,கலை கள்
பற்பல சிறக்கவழி காட்டுவர் என்று எதிர்
பார்த்திருந் தோம்! ஐய கோ
புண்ணாகுதே நெஞ்சம், புகலவும்நாக் கூசுதே
பொய்,லஞ்சம், சுரண்டல்,வஞ் சம்,
பொல்லாங்கு இவையன்றோ புயற்கூத் தடிக்குது
பூவுலகே! பாழ்உலக மே!

—க. ஜகன்னாதன், இராமநாதபுரம்.

★

முத்தமிழ் ஆகிமுத் தனையமொழி யாய்த்தமிழ்
மூவேந்தர் தம்மடியி லே
மேன்மையுடன் வளர்ந்திட்ட செந்தமிழே மென்மேல்
வளர்ச்சியடைந் தோங்கிடவேண் டும்;
தித்திக்கும் செந்தேன் அமுதமாய் உயர்தனிச்
செம்மொழி யாகமிளி ரும்
சிந்தையினிக் கும்புகழ்ம ணக்கும்உ யர்மொழி
திக்கெட்டும் பரவல்வேண் டும்
எத்தனை மொழிகளிங் கேவந்து கூகூவென்று
இன்னல் விளைவித்தபோ தும்
எதிர்த்துமற் போராடித் தமிழ்க்கொடியை அஞ்சாது
உயர்த்திடத் துணிதல்வேண் டும்
செத்துமே மொழிகாத்த தாளமுத்து நடராசன்
சென்ற வழிகண்டுணர்ந் து
சிறிதுமே அயர்வின்றி முன்சென்று உயிரனைய
தமிழ்மொழி காத்தல்வேண் டும்

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

## தொல்காப்பியச் சுவை-

### தொடர் கட்டுரை.

தமிழின் பழம் பெரும் இலக்கணச்சுவடி தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தின் இலக்கணங்களையும் நிரல்படத் தொகுத்துச் சொல்வதில் சிறந்த இந்நூலை எல்லோரும் அறியும் ஒரு வாய்ப்பை உருவாக்கித் தருகிறது, "தென்றல்". தென்றலின் மூலம் இலக்கியத் தொண்டாற்றி வரும் தோழர் இராம. இராமநாதன் எம். ஏ. அவர்கள், சுவையொழுகும் தமிழிலே தொல்காப்பியம் சொல்லும் செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் தருகிறார். கல்லூரி மாணவர்க்கும் பிறர்க்கும் பெரிதும் பயன்படும் **தொல்காப்பியச் சுவை** எனும் பெயர் பெறும் இத்தொடர் கட்டுரை, தென்றல் 20-6-59-ம் நாள் இதழில் தொடங்குகிறது.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, நவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நா